Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 9 ஆம் நாள் ஷஃபான் பிறை 25 (22-1-63) செவ்வாய்க்கிழமை இதழ் 34

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி
புதிதாகத்திறக்கப்பட்ட ஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்.

# லோக சபையில் கொழும்பு யோசனை

## உல்லாசப் பிரயாணம்

### மாணவன் உயிரைக் குடித்தது

### பஸ்ஸிற்கு வெளியே தலையை நீட்டி வேடிக்கை பார்த்ததன் விளைவு!

மாவிட்டபுரம், திங்கள்

மோட்டார் பஸ் ஒன்றில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்த வவனியா விவசாயப்பாடசாலை மாணவர் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் பஸ்ஸுக்கு வெளியே கழுத்தை நீட்டி வேடிக்கை பார்த்ததால் உயிரிழக்க வேண்டியேற்பட்டது.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்றிரவு கீரிமலைக்கும் சேந்தாங்குளத்துக்குமிடையில் நிகழ்ந்தது.

வவனியா விவசாயப் பண்ணையைச் சேர்ந்த முப்பது மாணவர்களும் இரண்டு விரிவுரையாளர்களும் ஒரு தனிப்பட்ட பஸ் வண்டியில் உல்லாசப்பிரயாணம் செய்தனர். இக் கோஷ்டி கீரிமலைக்கு வந்தது. கீரிமலையிலிருந்து சேந்தாங்குளம் நோக்கி பஸ் சென்றபொழுது முன்னால் சென்று கொண்டிருந்த ஒரு மோட்டார்காரைத் தாண்டிச் செல்ல வேண்டியேற்பட்டது. காரைத் தாண்டிச் சென்றபொழுதுபஸ வண்டிக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு காட்சிகளைப் பார்த்து ரசித்த மாணவனான கதிரவேலுப்பிள்ளை விஷ்ணுகாந்தனின் (வயது 20) தலை எதிர்பாராமல் ஒருதந்திக்கம்பத்துடன் மோதுண்டது. இதனால் அவர் ஸ்தலத்தில் மயக்கமுற்றார். அவர் மானிப்பாய் ஆஸபத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் அங்கு மரணமானார்.

இவரின் மரணம் சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. எஸ். யோகநாதன் இன்று காலை மானிப்பாய் ஆஸபத்திரியில் மரணவிசாரணை நடத்தினார்.

இதுசம்பந்தமாக பொலிஸ விசாரணை நடத்திய காங்கேசன்துறை உதவி பொலிஸ இன்ஸபெகடர் திரு. ஏ. இராசையாவின் வாககுமூலத்தைப் பதிவு செய்த நீதிபதி காங்கேசன்துறை டி. எம். ஓ வைப் பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட்டு பஸசாரதியான மதவாச்சியைச் சேர்ந்த முகட்டிகே கர்னேலிஸை ஆயிரம் ரூபாய் பிணையில் செல்லும்படியும் இன்ஸபெகடர் இராசையாவை மேலும் புலன் விசாரணை நடத்தும்படியும் உத்தரவிட்டார்.

## நெல் நிறைய இருக்கிறது

### அரசாங்கத்துக்கு அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

உத்தரவாத விலைத்திட்டத்தில் கமசேவைப் பகுதியினர் இன்று நூற்றுக்கு 20 விகிதம் அதிகப்படியாக நெல்வாங்கக்கூடியதாயிருக்கிறது என கமசேவைப்பகுதி ஆணையாளர் திரு. ஜே. வி. பொன்சேகா அரசாங்கததுக்கு யோசனை தெரிவித்திருக்கிறார்.

நாடு முழுவதிலும் உற்பத்தியாகும் மொத்த நெல்லில் சரிபாதிக்கு மேலாகவே அதாவது நூற்றுக்கு 55 விகித நெல்லை கமசேவைப்பகுதி வாங்கிவருகிறது.

---

## ரயில்கடவைகளில் மேல் பாலம்

### ரூபா ஒன்றரைக் கோடி செலவிடத் திட்டம்

கொழும்பு, திங்கள்

தெருப் போக்குவரத்தையும் ரயில் போக்குவரத்தையும் தாமதப்படுத்திவிடும் ரயில் கடவை போன்ற சந்திப்பான இடங்களை அவசியமானபடி அமைத்து கூடியமட்டில் போக்குவரவைத் துரிதப்படுத்தி வைப்பதற்கான நடவடிக்கைகளை பொதுமராமத்து இலாகா மேற்கொள்ளவிருக்கிறது. இந்த வேலைகளுக்கென்று ஒன்றரைக்கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொது மராமத்து இலாகா இது தொடர்பான வேலைகளை இவ் வருடத்தில் தொடங்கவிருக்கிறது.

கண்டி ரோட்டிலும், பேஸ்லைன் வீதியிலும் மூன்ருவதாக கும்பனித் தெருவிலும் உள்ள ரயில் கடவைகளில் 'மேல் பாலம்' கட்டுவது இத் திட்டத்தில் முதல் வேலையாகவிருக்கும். ரயில், மோட்டார் போக்குவரவு அதிகவேளை தாமதப்படும் இடங்களில் கொழும்பு நகரைச் சேர்ந்த பகுதியில் இருக்கும் இம் மூன்றும் முதன்மையாகக் கவனிககப்படவேண்டியன என்று கருதப்படுகிறது.

## 26 ஆசிய - ஆபிரிக்க நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு

## 2000 வீரர் பற்றி இன்னும் தகவல் இல்லை

புதுடில்லி, ஜன. 21

இந்திய-சீன எல்லைத் தகராறுக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு கொழும்பில் கூடிய ஆறு ஆசிய-ஆபிரிக்க நடுநிலைமை நாடுகள் தெரிவித்த யோசனைகளும் இந்த யோசனைகள்பற்றி இலங்கை, ஐக்கிய அரபுக் குடியரசு, கானு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்த விளக்கங்களும் இன்று இந்திய பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டன:

### இந்திய ராணுவ நிலையங்கள் இருக்கும்

"1959-ம் ஆண்டு நவம்பர் 7-ந் திகதிய நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடு என்று சீனர்கள் கணக்கிடும் எல்லைக்கோடுவரை லடாக் பகுதியில், சீனர்கள் 20 கிலோ மீட்டர்கள் (பன்னிரண்டரை மைல்) பின்வாங்கிச் செல்வார்கள். இப்பகுதியில் இப்பொதுள்ள இந்திய ராணுவ நிலைகள் தொடர்ந்திருந்துவரும். இருபகுதியினருக்கும் இடைவெளியாகவுள்ள 12 மைல் வெளிப்பரப்பிலும் சீனவும் இந்தியாவும் சிவில் நிலைகளை வைத்துக்கொள்ளலாம். எங்கெந்த இடங்களில், எத்தனை நிலைகள் அமைப்பது, நிலைகள் எத்தன்மையானவையாயிருக்கவேண்டும், எத்தனை சிப்பந்திகள் ஒவ்வொரு நிலையிலும் இருக்கவேண்டும் என்பவைபற்றி சீனவும் இந்தியாவும் தமக்குள் பேசி முடிவு செய்துகொள்ளவேண்டும்."

### மக்மோகன் கோடுவரை உரிமை

"கிழக்குப் பகுதியில் தக்ளாமலா, லோங்ஜு ஆகிய இடங்களைவிட இதர பகுதிகளில் மக்மோகன் கோடுவரை இந்தியத் துருப்புக்கள் செல்லலாம் அதேபோல் வடக்கில் சீனத் துருப்புக்கள் மக்மோகன் கோடுவரை வரலாம். தக்ளாமலை, லோங்ஜு ஆகிய இரு பகுதிகள் சம்பந்தமாக இரு நாடுகளும் பேசித் தீர்வு காணவேண்டும்."

### மத்திய பகுதியில் மாற்றமில்லை

"மத்திய பகுதியில் இப்போதுள்ள நிலைமையே தொடர்ந்திருக்கவேண்டும். இந்த நிலையில் மாற்றம் ஏற்படக் கூடிய எதையும் இரு நாடுகளும் செய்யக் கூடாது. இதனுல் இந்தப் பகுதிகளுக்கு அந்தந்த நாடுகளின் உரிமையோ, அந்தந்த நாடுகளின் கருத்துக்களோ பாதிக்கப்படமாட்டா."

"இந்த யோசனைகளுக்கும் விளக்கங்களுக்கும் இரு நாடுகளும் செயல்மூலம் பதிலளிப்பதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலுமுள்ள தகராறுக்குச் சமாதானத் தீர்வு காண இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வழியுண்டாகும்" இவைதான் கொழும்பு மகாநாட்டு யோசனைகளுக்கு கொடுக்கப்பட்ட விளக்கங்களாகும். கொழும்பு மகாநாட்டு யோசனைகள், அவற்றிற்கு கொடுக்கப்பட்ட விளக்கங்கள் ஆகியவற்றின்மீது இம் மாதம் 23-ந் திகதி புதன்கிழமை பார்லிமெண்டில் விவாதம் ஆரம்பமாகும்.

### 26 ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஆதரவு

இந்திய-சீன எல்லைப் பிரச்னையில் இந்தியாவுககு 26 ஆசிய-ஆபிரிகக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாக பார்லிமெண்டில் கேள்வி நேரத்தின்போது ஒரு கேள்விக்குப் பதிலளிககையில் பிரதமர் நேரு கூறினார். மலாயா, காங்கோ, லெபனன், லைபீரியா, எதியோப்பியா ஆகிய நாடுகளுட்பட மற்றும் பல நாடுகள் இந்தியாவின் நிலை சரியானதென ஆதரவு தெரிவித்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

### 2000 பேர்பற்றித் தகவல் இல்லை

ஒரு கேள்விககு இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வை.வி. சாவன்பதிலளிககையில் 3287 இந்திய ராணுவத்தினரையும் ராணுவத்தினர் அல்லாதவரையும் சீனர் கைது செய்ததாகத் தெரிகிறதென்றார். சுமார் இரண்டாயிரம் பேர்கள் பற்றி இன்னமும் தகவல் இல்லையென்றும் திரு. சாவன் கூறினர். சீன ராணுவத்தினர் எவரையும் இந்திய வீரர் கைது செய்யவில்லையென்றும் மந்திரி சாவன் அறிவித்தார்.

### நேபா நிர்வாகம்

வடகிழககு எல்லை ஏஜன்சிப்பகுதியில் இப்போதுள்ள நிர்வாகம் பழைய முறையின் அடிப்படையிலேயே அமைந்துளளதென்றும் நெருக்கடியான சமயத்திலும் நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற்றுளளதென்றும் பிரதமர் நேரு தெரிவித்தார். சீனர் ஐந்தாம் படையினர் சிலரை இங்கு விட்டுச் சென்றிருககககூடுமெனச் சந்தேகிக்கபபடுவதாகவும் இதுபற்றி கவனம் செலுத்தப்பட்டுவருகிறதென்றும் பிரதமர் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# செய்தித் திரட்டு

## வேண்டுகோள்

சரவணை, திங்கள்

சரவணை நாவலர் விளையாட்டுக் கழக வவனியா கிளையின் பொதுக் கூட்டம், தலைவர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமையுரையில், இக் கழகம் சென்ற ஆண்டு செய்த சேவைகளை எடுத்துக்கூறி இவ்வாண்டும் அதிக சேவை செய்வதற்கு அங்கத்தவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றுகேட்டுக்கொண்டார்.

∴ ∴ ∴

## 'தமிழனல்ல இலங்கையன்'

திருமலை, திங்கள்

'தமிழன் என்ற முறையில்லாது, இலங்கையன் என்ற வகையில் தான் ஐ. நா. சபைக்குச் சென்றேன். எனது வருங்கால சேவை, திருக்கோணமலையின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் என்றென்றுமிருக்கும்' என்று திருக்கோணமலை கூட்டுறவு துறைமுகத் தொழிலாளர் சங்கம் அளித்த தேநீர் விருந்துபசாரத்தில் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி பேசுகையில் கூறினர்.

∴ ∴ ∴

## கத்திக்குத்து

சாவகச்சேரி, திங்கள்

நுணுவில் மேற்கைச் சேர்ந்த முத்தையா ஜீவராசா என்பவர், கத்திக் குத்துக் காயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஜீவராசாவைக் கத்தியால் குத்தியதாகக் கூறப்படும் கதிரித்தம்பி விநாயகமூர்த்தி தலைமறைவில் இருந்துவருகிறார். எதிரியைப் பிடிப்பதில் பொலிஸார் முயற்சித்துவருகின்றனர்.

∴ ∴ ∴

## பிணையில் விடுபட்டனர்

சாவகச்சேரி, திங்கள்

கூசென்ஸ் பெருமல் 3 லொறிகளில் வெங்காயம் ஏற்றிச் சென்றதற்குப் பொறுப்பாக விருந்த ஏழுபேர் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆயர்செய்யப்பட்டனர். மாவட்ட நீதிபதி திரு. எம். எம் அப்துல்காதர், லொறிகள் ஒவ்வொன்றையும் தனித்தனி ஆயிரம் ரூபாய் பிணையிலும் பொறுப்பாகவிருந்த ஏழுபேரையும் தனித்தனி ஐந்நூறு ரூபா பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட்டார். மொத்தமாகவிருந்த 370 முட்டை வெங்காயத்தையும் ஏலத்தில் விற்குமாறு உத்தரவிட்டார்.

∴ ∴ ∴

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் நிலையத்தினரால் ஓர் இலவச படக்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

∴ ∴ ∴

## குழந்தை மாருட்டம்?

கம்பஹா, திங்கள்

ஆஸ்பத்திரியில் தனக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்ததென்றும் ஆனால் ஒரு பெண் குழந்தை தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கம்பஹா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு பெண் புகார் செய்துள்ளார்! கம்பஹா பொலிஸார் இதுசம்பந்தமாக விசாரணை செய்துவருகின்றனர். குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் ஒரே நாளில் இருவருக்குக் குழந்தைகள் பிறந்ததென்றும் இதில் தான் மாருட்டம் நடைபெற்றிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

∴ ∴ ∴

## தோட்டத்தில் பொங்கல் தினம்

மாத்தளை, திங்கள்

மாத்தளை பிற்றகந்தைக் குறூப் தேயிலைத் தோட்டத்தில் தைப்பொங்கல் தினம் பல நிகழ்ச்சிகளுடன் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. உயர்வு, தாழ்வு மனப்பான்மையை விட்டு நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். தைப்பொங்கல் தினத்தன்று பல விளையாட்டு நிகழ்ச்சிகளும் களியாட்ட நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

∴ ∴ ∴

## சமயப்பிரசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் கந்தசாமிகோவில் சண்முகதீர்த்த மண்டபத்தில் இரண்டாம் வருடாந்த வாரப் பிரசாரத்தை அதன் தலைவர் ஸ்ரீமத் சி. எஸ். எஸ். மணிபாகவதர் ஆரம்பித்துவைத்தார். சமயப் பிரசாரகர் திரு. ச. கி நடராசா "கைக்கிளை" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர். டாக்டர் ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தங்கக்கணபதியின் சொற்பொழிவொன்று இவ்வாரம் இடம்பெறும்.

∴ ∴ ∴

## பம்பாய் வெங்காயம்

கொழும்பு, திங்கள்

சின்னவெங்காயத்திற்கு விதிக்கப்பட்ட இறக்குமதித் தடையினல், பம்பாய் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகிறது. பம்பாய் வெங்காயம் ரூத்தல் ஒன்று 45 சதமாக விற்பனை செய்யப்படுகிறது. பம்பாய் வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலை 26 சதமாகும்.


**வரி விளம்பரம்**

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி

6%

உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.



**அடைவு நகை ஏலவிற்பனவு**

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதி 207-ம் இலக்ககடையில் சோம. மு. இராமநாதன் அவர்களிடம்1-4-1959 தொடக்கம் 31-12-1960 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 15-2-63வெள்ளிக்கிழமை காலை 10மணி தொடக்கம் மேற்படிகடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
21-1-63. 659



**தொய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணனந்தர்.
உகலாயபிள்ளையார்கோவிலடி.
யாழ்ப்பாணம்.


## நூற்றாண்டுவிழா

திமருலை, திங்கள்

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா திருக்கோணமலையில் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. பல பகுதிகளிலும் இவ்விழா நடைபெற்றது

## நியமனம்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி, விக்னேஸ்வரா கல்லூரியின் உதவி ஆசிரியர் திரு. எஸ். ஆறுமுகம், இம் மாதம் முதல் நெல்லியடி ஐக்கிய கலாசாலையில் அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

## பாதுகாப்பு நிதிக்கு படக்காட்சி

உடுப்பிட்டி, திங்கள்

இந்திய பாதுகாப்பு நிதிக்கு பணம் சேகரித்து அனுப்பும் முகமாக, உடுப்பிட்டித் தொகுதி மக்கள் "சபாஷ் மாப்பிள்ளை" என்னும் திரைப் படத்தை நடாத்தி பணம் சேகரித்து அனுப்பியுள்ளார்கள்.

## கலை விழா

உடுப்பிட்டி, திங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி உடுப்பிட்டி கிளையின் கலைவிழா வழக்கறிஞர் திரு. க. ஜெயக்கொடி தலைமையில் நாவலர் மட மண்டபத்திலும் வதிரி மத்திய ஆங்கில பாடசாலையிலும் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு திரு. ஜெயக்கொடி பரிசில்களை வழங்கினர்.

## விவேகப்போட்டி

வட்டுக்கோட்டை, திங்கள்

வட்டுக்கோட்டை தன்னொளி மன்றத்தார் நடத்திய "தன்னொளி" விவேகப்போட்டியில் செல்வி. த. கோகுலநாயகி முதற் பரிசையும். செல்வன். எஸ். சுப்பிரமணியம் இரண்டாம் பரிசையும் பெற்றனர்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

### விவேகானந்தர் விஜயம்

சுவாமி விவேகானந்தர் அவர்கள் 1887-ம் ஆண்டு தைமாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்தார்கள். சுவாமி அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்ற கூட்டத்தில் பல கிறிஸ்தவர்களும் காணப்பட்டார்கள்.

மறுநாள்சுவாமிஜியைச் சந்தித்து அவரின் ஆசிபெறும்வாய்ப்புஎனக்கு கிடைத்தது. சுவாமி அவர்கள் இந்தியா சென்றபின் காலஞ்சென்ற திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் ஒரு கூட்டம் ஏற்படுத்தி சுவாமியின் கொள்கை மாயாவாதம் (அத்வைதம்) என்றும், அது சைவ சமயத்திற்கு முரணனது என்றும் பிரசங்கம் செய்ததுடன் துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டார்கள். ஆயினும் சுவாமிஜியின் பிரசங்கமே இன்றும் எமது மனத்தை விட்டு அகலாது உள்ளது.

சி. வி. இராஜரத்தினம்.
அரியாலை,
யாழ்ப்பாணம்.

●

### வீதியின் சீர்கேடு

தெல்லிப்பழையிலுள்ள கொல்லங்கலட்டி வீதி மழை காலங்களில் மிகவும் சீர்கேடான நிலையிலுள்ளது. ஏனெனில் இங்கு தண்ணீர்செல்வதற்காக வெட்டப்பட்டவாய்க்காலும், வீதியும் ஒரே மட்டமாக இருப்பதும் இதற்கு ஒரு காரணம். இந்த வீதியில் உள்ள குழிகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது இதனல் மழை காலங்களில் அந்த வீதி வழியாகச் செல்லும் பாத சாரிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. வீதியோ சிறிது. போக்குவரத்து வண்டிகளுக்காக ஒதுங்கி நிற்பதோ கஷ்டம். மழைகாலங்களில் அந்த வழியால் செல்லும் பாதசாரிகள் பல விதங்களில் கஷ்டப்படுகிறார்கள். இதனல் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் மாணவ, மாணவிகளே.

பெரும்பாலும் கொல்லங்கலட்டி கிரதமத்திலுள்ள மாணவ, மாணவிகள் அந்த வழியால் தான் பாடசாலைக்குப் போய்வருவது. மழை காலங்களில் வரும் இவர்களுக்கு போக்கு வரதது வண்டிகளால் அழுக்கு நிறைந்த நீர் தெளிக்கப்படுகிறது. ஆனபடியால் இந்த வீதியை அரசாங்கம் செப்பனிட முயற்சிக்கவில்லை, இவ் வீதி சீக்கிரத்தில் செப்பனிடாவிட்டால் பல தீங்

(8-ம் பக்கம்பார்க்க)


சரித்திரம் வெளிவந்துவிட்டது !

ஆதிகாலம் — மத்தியகால

**இலங்கைச் சரித்திரம்**

எச். எஸ். சி. (H. S. C.) பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளுக்குரியது.

ஆக்கியோன் : திரு. வ. மகாலிங்கம் B. A; (Ceylon)

விலை 2-50

பதிப்பாளர்:
ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை
13, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.



நீங்கள்
அறியவேண்டியதோர்
இரகசியம்
பொஸ்



BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்

நீடியகால சேவையையும், சிக்கன சமையலையும் அளிப்பதற்கென தயாரிக்கப்பட்டவை.



சமையல் அடுப்பு — 27U — 2 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 37U— 3 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகை போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 20U — 2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற இடவசதியுண்டு. போர்ஸலேன் மேற்புறம்- கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு

பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு: CWE ஸி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட். ஸி. டப்ளியூ. ஈ. கடை, மருதானை மற்றும் வெலியூர் டிப்போக்கள்

CWE HW47

# 'கொழும்பு யோசனை இந்தியாவுக்கு தீங்கல்ல'

## காங்கிரஸ் எம்.பி.க்களுக்கு பிரதமர் நேரு விளக்கம்

## தவாங், வாலாங்கிலிருந்து சீனர் முற்றாக வெளியேறிவிட்டனர்

புதுடில்லி, ஜனவரி 21

இந்திய — சீன எல்லைத்தகராறுக்குத் தீர்வுகாணுமுகமாக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளை இந்தியா ஏற்றுக்கொள்வதால் இந்தியாவுக்குத் தீங்கு எதுவும் ஏற்பட்டுவிடமாட்டாதென்று இந்தியப்பிரதமர் நேரு நேற்று காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் கூறியதாகத் தெரியவருகிறது. இன்று கூடும் பார்லிமெண்ட் கொழும்பு மகாநாட்டு யோசனைபற்றி வெள்ளிக்கிழமை விவாதித்து முடிவெடுப்பதற்கு முன் கொழும்பு மகாநாட்டு யோசனை சம்பந்தமாக சீனா தனது முடிவைத் தெரிவித்துவிடுமெனத் தாம் நம்புவதாகவும் பிரதமர் நேரு தெரிவித்தார்.

### கிழக்குப் பகுதியில் மாறுபடுகிறது

கொழும்பு மகாநாட்டு யோசனை மேற்குப் பகுதியைப் பொறுத்தவரை, சீனர்கள் 1962-ம் ஆண்டு செப்டம்பர் 8-ந் திகதிக்கு முன்னுள்ள நிலைகளுக்கு வாபஸாகவேண்டுமென்ற இந்தியாவின் யோசனையை ஒத்திருக்கிறதென்றும் கிழக்குப் பகுதியில் இந்தியாவின் கோரிக்கைக்கும் கொழும்பு மகாநாட்டு யோசனைக்கும் சற்றே மாறுதல் இருக்கிறதென்றும் நேரு கூறியதாகத் தெரிகிறது. கிழக்கில் லோங்ஜூவும் டோலாவுக்கு மூன்று மைல் தூரப்பகுதியும் கொழும்பு மகாநாட்டு யோசனைப்படி இந்தியாவசம் இருக்கமாட்டாது. ஆனால் இப்பகுதிபற்றி சீனாவும் இந்தியாவும் நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பது மகாநாட்டு யோசனை. மத்திய பகுதியில் பாராகோட் இந்தியாவசம் வராது. இப்பகுதிபற்றி முன்னரே திபேத்துடன் பேச்சு இருந்துவந்தது. பாராகோட்டிலுள்ளவர்கள் குளிர்காலத்தில் அவ்விடத்தைக் காலிசெய்துகொள்வார்கள் என்று பிரதமர் கூறினர்.

### சீனாவுக்கு சோவியத் உதவி

"எந்த நாடும் வெளிஉதவி இல்லாமல் இருப்பது கஷ்டம். சீனாவுக்கு சோவியத் யூனியன் தான் கணிசமான அளவு உதவி அளித்துவந்திருக்கிறது. நடுநிலைமைக் கொள்கையிலும் சமாதான சகவாழ்வுக் கொள்கையிலும் சீனாவுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் இந்தக் கொள்கையில் சோவியத் யூனியனுக்கு நம்பிக்கை இருக்கிறது. போர் தவிர்க்க முடியாதது என்பது சீனாவின் சுததுவம். போர் தவிர்க்கக்கூடியது என்பது சோவியத்தின் நம்பிக்கை" என்று பிரதமர் நேரு விளக்கம் தெரிவித்தார். "நடுநிலைமைக் கொள்கையை பல நாட்டு மக்களும் அரசாங்கங்களும் பாராட்டுவதுடன் நம்பிக்கையும் கொண்டுள்ளன. ஆனால் நம் நாட்டிலுள்ள சிலர் நடுநிலைமைக் கொள்கையை இன்னும் நிம்ப மறுக்கிறார்கள்" என்று திரு. நேரு சொன்னார். "பேச்சுவார்த்தைக்கு மறுப்பது நாகரிகமல்ல. எதுவும் சீனாவின் பதிலில் தங்கியுள்ளது" என்று அவர் அறிவித்தார்.

### ஜனசங்கம் எதிர்ப்பு

இந்திய எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜனசங்கக் கட்சி கொழும்பு மகாநாட்டு யோசனைகள் ஆக்கிரமிப்பாளரையும் ஆக்கிரமிப்புக்குள்ளானவரையும் ஒரே நிலையில் வைத்துக் கணித்துள்ளதென்று கருத்துத் தெரிவித்துள்ளது. கொழும்பு மகாநாட்டு யோசனையை இந்தியா ஏற்றுக்கொண்டால் இந்தியப் பிரதேசத்தின் பெரும்பகுதி சீனர்வசமாகிவிடுமென்றும் சீனரின் ஆக்கிரமிப்பு அவர்களுக்கு அனுகூலமாகிவிடுமென்றும் ஜனசங்கக் கட்சி ஒரு தீர்மானத்தில் தெரிவித்துள்ளது.

### வாலாங், தாவாங்கிலிருந்து வாபஸ்

வாலாங்கிலிருந்தும் தாவாங்கிலிருந்தும் தமது எல்லைக் காவல் துருப்புக்கள், 1959-ம் ஆண்டு நவம்பர் 7-ந் திகதிய உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு முற்றாகத் திரும்பிவிட்டனர் என்று சீன வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. வாலாங்கிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்துக்கும், தவாங்கிலிருந்து 300 கிலோ மீட்டர்வரையும் சீன எல்லைக்காவல் துருப்புக்கள் வாபஸானதாக சீனா அறிவித்துள்ளது.

### நேரு தலைமையில் சர்வ கட்சி ஊர்வலம்

இம்மாதம் 26-ந் திகதி நடைபெறவிருக்கும் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் புதுடில்லியில் நடைபெறும் அணிவகுப்பு, ஊர்வலங்களில் இம்முறை புதிய ஊர்வலமொன்றும் இடம்பெறவிருக்கிறது. பிரதமர் நேருவின் தலைமையில் சர்வகட்சித் தலைவர்களின் ஊர்வலம்தான் இப்புதிய முறை ஊர்வலமாகும். அலங்கார வண்டி ஊர்வலங்கள் இடம்பெறமாட்டா.

### பிரிவினைத் தடை மசோதா

பிரிவினைக் கோரிக்கையைத் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதும் நாட்டின் அரசியல் சாஸனத்தைத் திருத்தும் மசோதாவுக்கு எல்லா ராஜ்யங்களும் சம்மதம் தெரிவித்துவிட்டதாக இந்திய உள்விவகார அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி ராஜ்ய முதன் மந்திரிகள் மத்தியில் நேற்றுப் பேசுகையில் தெரிவித்தார். பிரிவினைத் தடை மசோதா பார்லிமெண்டின் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுமென்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

### விவேகானந்தர் போதனை

கல்கத்தாவில் சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு ஜயந்தி விழாக் கொண்டாட்டங்களை ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்று மாலை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், சுவாமி விவேகானந்தரின் போதனைகளை நாம் பின்பற்றினால் எவ்வித ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் சமாளித்துக்கொள்ள முடியுமென்றார். இவ்விழாவுக்கு பிரதமர் நேரு, டாக்டர் ராஜேந்திரபிரசாத் ஆகியோரும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். சென்னையில் விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்ட நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் பேசுகையில் நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலையில் சுவாமி விவேகானந்தரின் போதனைகளை மக்கள் நினைவுகூர வேண்டியது அவசியமென்றார். பதினைந்தாண்டு சுதந்திரத்தின் பின் சீனா நயவஞ்சகமாக இந்தியாமீது தாக்குதல் நடத்தியுள்ள இச்சமயத்தில் "விழிமின், எழுமின்" என்ற சுவாமி விவேகானந்தரின் அறைகூவல் மக்களுக்கு அவசியமென்று அவர் கூறினர். என்னதான் இன்னல் வரினும் அவற்றை வலிமைக்கு ஏற்பட்ட சோதனையாகக் கருத வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

### நகை செய்வது நின்றுவிடாது

தங்கப் பத்திரங்களுக்குப் பதிலாக "தங்கம் வைத்திருப்போர்" பத்திரங்கள் என்ற புதிய பத்திரங்கள் வினியோகிக்கலாமென்ற யோசனையைத் தாம் ஆதரிக்கவில்லையென்று நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார். 14 காரட் தங்கத்துக்கு மேல் நகை செய்ய அனுமதிக்கவேண்டுமென்ற யோசனையையும் அவர் நிராகரித்தார். நகைத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமென்ற யோசனைபற்றி அவர் குறிப்பிடுகையில் தங்கக் கட்டுப்பாட்டினால் நகைசெய்வது நின்றுவிடப்போவதில்லையென்றார்.

## 'இலட்சிய வாழ்க்கையே பயன் தரும்'

### திருமலையில் விவேகானந்தர் நூற்றாண்டுவிழா

திருக்கோணமலை திங்கள்

"ஒருவன் இலட்சியத்தோடு வாழ்ந்தால் தான் அவன் தான் வாழ்வதன் பயனைக் காணலாம். இன்றேல் வாழ்க்கை அவனுக்குக் கசந்துவிடும். இதை பல பெரியார்களின் வாழ்க்கையில் காணலாம். அப்படிப்பட்ட ஓர் இலட்சிய வாழ்க்கை நடத்தியவரே சுவாமி விவேகானந்தர். அவர் இன்று இருந்தாரானால் நூறு வயது நிரம்பியிருக்கும். இளமைப் பிராயத்திலே தனது வாழ்க்கையினின்று விடுதலை பெற்றுக்கொண்டார். எல்லாச் சமயங்களும் ஒரே நெறியைத் தான் போதிக்கின்றன என்ற உண்மையை எடுத்துக்கூறி நிலைநாட்டினவர் சுவாமி விவேகானந்தர். அவர் ஓர் சமரசசன் மார்க்க ஞானியாகும். இவர் மக்களிடையே ஆண்மையை, அருட் சக்தியை, ஆத்மீகத்தை வளர்த்தார். உலகம் முழுவதற்கும் ஆத்மீக ஒளி பரப்பிய ஞானி. 'தேசத்துக்காக தியானம் செய்யத் தயங்காதே, தேச நன்மைக்காகத் தொண்டு செய்யத் தயங்காதே' இது சுவாமி விவேகானந்தரின் சித்தாந்தம்".

இவ்வாறு திருக்கோணமலையில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவில் திரு. பெ. கணநாதபிள்ளை கூறினர். கூட்டத்திற்கு சுவாமி சச்சிதானந்த மாதாஜி தலைமை தாங்கினர். பண்டிதர் சரவணமுத்து பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

உலகம் போற்றும் உத்தம புருஷர்கள் காலத்திற்கேற்ப தோன்றி உய்யும் நெறியைப் போதித்துச் சென்றனர். சிற்றின்ப வாழ்விலும் அறிவொளி மாய்ந்த இருளிலும் உழல்கின்ற மன்னுயிரை உய்விக்க ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவதரித்தார். தாம் கண்ட பேரின்பம் இவ்வையகம் பெறவேண்டும் என்று பொங்கிய பரிவால் விண்ணகத்திலிருந்து மண்ணகத்துக்கு 'ஞாலம் தழைத்தோங்க பணியாற்றவேண்டும்' என்று விவேகானந்தரைத் தந்தருளினர், ஸ்ரீ இராமகிருஷ்ணர். சமயம், சமூகம், சமுதாயம் ஆகியவற்றை கீழ்நிலையிலிருந்து உயர்ந்தநிலைக்குக் கொண்டுவரக்கூடிய இயக்கமாகிய ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தை நிறுவியபெருமை துறவி வேந்தர் விவேகானந்தருக்கு உரியது. சுவாமி விவேகானந்தர் மறைந்துவிட்டாலும் அவரது நினைவு மறையாமல் சுடர்விடுகிறது.

அடுத்து தொழில் அதிகாரி எஸ். என். குருசாமி பேசுகையில்:

"நாங்கள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி, நேராகவோ, கோணலாகவோ பல பிரதேசங்களை அடைந்து முடிவில் பரந்த ஒரே சமுத்திரத்தில் சேர்வதுபோன்று, பெரியவர்களால் காணப்பட்ட மதங்கள் ஒன்றோடொன்று முரண்படுவதுபோலக் காணப்படினும், மாந்தர்களை அவர்களுக்கு ஏற்ற வழிகளில் கடவுள் என்ற ஒரே ஒரு பரம்பொருளிடத்து சேர்க்கின்றனவாதலால், மதத்தின்பேரால் சண்டையிடுவதை ஒழித்துவிட்டு மக்கள் சகோதரபான்மையுடன் வாழவேண்டும். என்ற கருத்தை மக்களிடையே பரப்பியவர் சுவாமி விவேகானந்தர்" என்று கூறினர். மற்றும் திருமதி டி. ஏ. தங்கராசா, செல்வி தனலட்சுமி சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்கள். முடிவில் சைவப்புலவர் இ. வடிவேலின் நன்றியுரையுடன் விழா முடிவெய்தியது.

---

### பாரிசில் அடினர்

பாரிஸ், ஜன. 21

பிரஞ்சு ஜனாதிபதி டிகோலுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் கொன்ட்ராட் அடினர் நேற்று பாரிஸ் வந்து சேர்ந்தார். மூன்று தினங்கள் பாரிசில் தங்கவிருக்கும் டாக்டர் அடினரை பிரஞ்சுப் பிரதமர் திரு. கொம்பிடோவும், பிரெஞ்சு வெளிவிவகார மந்திரியும் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

---

### 20 கோடி டாலர் உதவி

பாரிஸ், ஜன. 21

அல்ஜீரியாவுக்கு 20 கோடி டாலர் பிரான்ஸ் உதவியளிக்கத் தீர்மானித்துள்ளது. இத்தொகை அல்ஜீரியாவின் விவசாயம், வீடமைப்பு ஆகியவைகளுக்குச் செலவிடப்படும்.

---

### சந்திரப் பிரயாணம்

#### நிக்கலயாவ் கருத்து

புதுடில்லி, ஜன. 21

1970-ம் ஆண்டுக்கு முன் சந்திரனை மனிதன் சென்றடைய முடியுமென்றும் ஆனால் இதற்கு சோவியத் யூனியனும் அமெரிக்காவும் கூட்டு முயற்சி செய்ய வேண்டுமென்றும் சோவியத் வானவெளி வீரர் மேஜர் நிக்கலயாவ் இங்கு நேற்று நிருபர்களிடம் பேசுகையில் கூறினர். மேஜர் நிக்கலயாவ் புதுடில்லியிலிருந்து இந்தோனேஷியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

---

### அணு ஆயுத சோதனைத்தடை

#### குருஷ்சேவ்-கென்னடி கருத்து

மாஸ்கோ, ஜன. 21

அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு இதுவே சரியான சமயமென்று சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்கு சென்றமாதம் 19-ந் திகதி எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

திரு. குருஷ்சேவும் திரு. கென்னடியும் பரிமாறிக்கொண்ட கடிதங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

கியூபா நெருக்கடி தீர்க்கப்பட்டதுபோலவே அதைத் தொடர்ந்து இதர பிரச்னைகளுக்கும் தீர்வு காண்போம் என்று திரு குருஷ்சேவ் தமது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

திரு. குருஷ்சேவுக்கு திரு. கென்னடி எழுதிய பதிலில் அணு ஆயுத சோதனைத் தடைப் பிரச்னை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளப்படலாமென நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

---

டூனிஸ், ஜன. 21

டூனிஸிலுள்ள தனது தூதுவரை அல்ஜீரியா திருப்பி அழைத்துக்கொண்டது. அல்ஜியர்ஸிலுள்ள டூனிஸிய தூதுவரை டூனிஸியா சென்ற மாதம் திருப்பி அழைத்துக்கொண்டதே இதற்குக் காரணம்.

## மணி வாக்கு

உலகில் பாவம் ஒன்று இருக்குமானால் அது அச்சம்தான். அது மரணத்துக்குச் சமமாகும். உபநிஷதங்கள் போதிக்கும் மகத்தான உண்மையும் அதுதான்.

— சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
தை மீ 9 (22-1-63)


## பெரிய கொடுமை

மூன்று நாட்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்திலே இரவு 10 மணிக்குமேல் பல வீடுகளில் பொலிசார் திடீரெனப் புகுந்து, பலரைக் கைது செய்து பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் அடித்தும் இம்சித்தும் 1952-ம் வருடத்துக்குப் பின்பே இலங்கை வந்ததாக வாக்குமூலம் எழுதிக் கையெழுத்திடும்படி வற்புறுத்தியதாகவும், 20 வருடங்களுக்கு மேலும் இங்கு தொடர்ந்து வசித்துவருவதாக அத்தாட்சி காட்டியபின் அவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டதாகவும், மற்றவர்கள் இன்னும் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், சட்டப்படி கண்யமாக இங்கு வசித்துவரும் குடும்பத்தாரும் எந்தச் சமயமும் பொலிசார் தங்களைப் பிடித்துக் கொண்டுபோய் இம்சிப்பார்களோ என்று பயந்து பயந்து வாழ்வதாயும் சில அன்பர்கள் தெரிவிக்கின்றனர். பெண்களையும் கொண்டு சென்று இவ்விதமே துன்பத்துக்கு உள்ளாக்கியதாயும் தமிழில் கொடுக்கும் வாக்குமூலத்தைச் சிங்களத்தில் எழுதி அதில் கையெழுத்திடும்படி வற்புறுத்துவதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தப் புகார்களில் ஓரளவு உண்மையிருந்தாலும் கூட, அதுபெரிய கொடுமையாவதுடன், ஐ.நா. மனித உரிமை சாஸனத்துக்கும் முற்றிலும் மாறானதாகும்.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்கவேண்டியதுதான். அதுபற்றி கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் சட்டவிரோதமாக வருபவர்களும் மனிதர்கள். மனித நீதிக்கும், ஐ. நா. மனிதஉரிமை சாஸனத்துக்கும் மாறாக எவ்வித நடவடிக்கையும் எடுப்பது அநியாயமாகும். அப்படியிருக்க, அமைதியாகவும் கண்யமாகவும் நாணயமாகவும் வாழும் குடும்பத்தினரை இரவில் கைதுசெய்து, பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று அடித்து நிர்ப்பந்தமாக அவர்களிடம் வாக்குமூலம் வாங்க முற்படுவது எந்த நாகரிக அரசாங்கமும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை ஆகாது. இவ்விதகாரியங்கள், நமது அரசாங்கத்தின் பெயரால் நடப்பதுபற்றி பிரதமர் சிறிமாவோவுக்கும் தெரிந்திருக்குமென்று நாம் நினைக்கவில்லை. உலகிலே அமைதியை நிலைநாட்ட முற்பட்டுள்ள ஒருதாய், ஒருபிரதமர் தனது நாட்டிலேயே, இவ்வித அநியாயங்கள் நடப்பது தெரிந்தால் நிச்சயம் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமலிருக்க முடியாது. சில குட்டிதேவதைகள் செய்யும் இவ்வித அநியாயமே அரசாங்கத்தின் செல்வாக்கையும் நற்பெயரைக் கெடுக்கவும், பொதுமக்களின் ஆதரவை இழக்கவும் செய்வதாகின்றது.

இதுபற்றிப் பார்லிமெண்ட் சபையிலே புகார் செய்வதால் எவ்வித பயனும் ஏற்படுமென்று நம்புவதற்கில்லை. எம். பி.க்களே அடிபட்டும் கேள்வி முறை காணோம். ஆகவே மனித உரிமைகளிலும் இங்கு பொதுமக்கள் நிம்மதியாக வாழவேண்டுமென்பதிலும் அக்கறை கொண்டவர்கள் அரசியல், கட்சிக் கலப்பில்லாத சங்கமொன்று அமைத்து இவ்வித அக்கிரமங்கள் குறித்து, மேலதிகாரிகளுக்கும் பிரதமர், கவர்னர் ஜெனரல் முதலியவர்களுக்கும் அவ்வப்போது முறையிட வேண்டும். இன்றேல் இவ்வித அதிக்கிரமங்கள் அதிகரித்து யாரும் நிம்மதியாக வாழ முடியாது போகும். இதற்கிடையே சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் இதைப்பற்றி உடன் கவனித்து, இவ்வித கொடுமைகள் நடக்காமல் பார்த்துக் கொள்வார்களா?

## அடுத்த பிரதமர் டட்லி?

### மீரிகம பிரதிநிதி ஆசை

பொல்காவலை, திங்கள்

இலங்கையின் அடுத்த முதல் அமைச்சராவதற்கு யாருக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது?

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மீரிகமத் தொகுதிப் பிரதிநிதி திரு. விஜயபாகு விஜயசிங்கா திரு. டடலிசேனநாயக்காவின் பெயரைக் குறிப்பிடுகிறார். அவருக்குத்தான் முதலிடம் தரவேண்டுமென அவர் அபிப்பிராயப்படும் விஜயசிங்கா எம். பி. "தகுதியான ஆளுக்குத் தகுதியான ஸ்தானத்தை அளிக்கவேண்டுமென்ற கொள்கை உடையவன் நான்" என்றும் சொன்னார்.

கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையைத்தான் ஆதரிக்கவில்லை என்றும் அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் பலர் கிராமாதிகாரிகளிடம் மனக்காய்ச்சல் கொண்டிருந்தார்களென்றும் அவர் மேலும் கூறினார்.

அம்பேபுசாவிலுள்ள கீனதேனியா மகாவித்தியாலயத்தில் ஒரு நாட்டிய மண்டபம் கட்டுவதற்கு அத்திவாரக்கல் நாட்டும் வைபவத்தில் பேசியபோதே மீரிகம பிரதிநிதி இவ்வாறு கூறினார். திரு டட்லி சேனநாயக்கா அத்திவாரக்கல் நாட்டினார்.

திரு. டட்லி இவ்வைபவத்தையொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசியபோது நமது முன்னேற்றத்துக்கு ஆத்மீக வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றும், சமய அடிப்படை இல்லாத கல்வி நல்ல பிரச்னைகளைத் தோற்றுவிக்கமாட்டாதென்றும் சொன்னார். இன்றைய கல்வி பொதுவாக நமக்கு மகிழ்ச்சிதரக் கூடியதாயில்லையென்றும் இந்தக் குழப்பத்தைத் தெளிவுபடுத் சரியானதொரு மார்க்கம் தேட வேண்டிய அவசியம் இன்று நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறதென்றும் டட்லி மேலும் கூறினார்.

# நெற்காணிச்சட்டத் திருத்த விதிகள்

## இவ்வாண்டு நடைமுறைக்கு வரும்

கொழும்பு, திங்கள்

கடந்த ஆண்டில் வரவுசெலவுத் திட்டத்தில் நெற்காணிச் சட்டத்துக்கு அமைச்சர் குறிப்பிட்ட உத்தேச திருத்தங்கள் தற்பொழுது சட்ட உருப் பெற்றுவிட்டன. பிரதிநிதிகள் சபை இவ்வாரம் கூடும்போது அரசாங்கக் கட்சியினர் அதுபற்றிக் கலந்தாலோசிப்பார்கள். ஆதலால் சட்ட உருப்பெற்றிருக்கும் குறித்த திருத்தங்களை அவர்களுக்கு விநியோகிக்கும்படி கமசேவைப் பகுதியினருக்கு காணி அமைச்சர் திரு வி. பி. டி. சில்வா உத்தரவிட்டுள்ளார்.

நெற்காணிச் சட்டம் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் இவ்வாண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென்றும் இவ்வாண்டின் நடுப்பகுதியில் அது மேலும் விரிவாக அமுலுக்கு வருமென்றும் கமசேவைப்பகுதி அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பயிர்ச்செய்கைக் குழுவென்றிருக்கும் சங்கங்கள் செய்யும் நிர்வாகத் தவறுகளினாலோ அல்லது சட்டசம்பந்தமான விவகாரங்களினாலோ ஒரு நிலத்தில் கமம் செய்யும் உரிமை ஒரு விவசாயிக்கு ஐயுறவான நிலையை அடைந்திருந்தால் அம்மாதிரி நிலைமைகளில் அந்த உரிமையை அவருக்கே திட்டவட்டமாக அளிக்கக்கூடிய வகையில் குறிப்பிட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. திருத்தங்கள் பெரும்பகுதியும் இதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. மேலும், விவசாயிகள் அவர்களின் உழைப்பின் பலனை முழுப்படியாக அனுபவிப்பதற்குத் தடையாக இருந்துவரும் வேறுசில அம்சங்களையும் குறித்த திருத்தச் சட்டங்கள் நீக்கிவைப்பதாயுள்ளன.

# நகர அமைப்புத் திட்டம்

## ஜனநெருக்கடி குறைய வழி

ஹாம்பர்க் நகரின் அரசியல் பொருளாதார முக்கியத்துவம் கெடாமல் ஜன நெரிசலைக் குறைக்க ஒரு அபூர்வ திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல் நடத்தப்படவிருக்கிறது. இதன்படி ஹாம்பர்க் நகரிலுள்ள முக்கியமான காரியாலயங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், பாங்கிகள் எல்லாம் தனியாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு மாற்றப்படும். உலகிலேயே ஹாம்பர்க்தான் இம்மாதிரி திட்டத்தை நடத்தும் முதல் நகரமாகும்.

ஹாம்பர்க் நகரின் ஜன நெருக்கடியைக் குறைக்க முக்கியமான காரியாலயங்கள், ஸ்தாபனங்கள், பாங்கிகள் எல்லாம் புதிதாக உருவாகும் நகரில் கட்டப்படும் இடங்களுக்கு மாற்றப்பட்ட திட்டம் வகுக்கப்பட்டு தனித்தனியே நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனியில் இத்திட்டம் மிகவும் நூதனமானது. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு இத்திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. ஹாம்பர்க் கட்டிடக் கலை நிபுணர் பேராசிரியர் வெர்னர் ஹெபி பிராண்ட் வெளியிட்ட யோசனையை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் ஹெபி பிராண்ட் உருவாக்கியிருக்கிறார். முக்கியமான காரியாலயங்களையும் ஸ்தாபனங்களையும் பிளான் போட்டு தயாரிக்கும் கட்டிடங்களுக்கு மாற்றிவிட்டால் ஹாம்பர்க்கின் ஜன சந்தடி வெகுவாகக் குறைந்துவிடும்.

முதலில் இத்திட்டம்பற்றி போதிய நம்பிக்கை தெரிவிக்கப்படவில்லை என்றாலும் சீக்கிரமே இத்திட்டத்திற்கு ஆதரவு மிகவும் அதிகரிக்கலாயிற்று. ஜெர்மன் நகர்களுக்கு அருகில் விஸ்தரிப்புககாக ஏற்படும் உபநகரங்களை ஏற்படுத்துவது போன்றது அல்ல இத்திட்டம். காரியாலய கட்டிடங்கள், கடைகள் இவற்றை மையமாக அமைத்து ஒரு தனி நகரமே ஹாம்பர்க்குடன் இணைந்தாற்போல் உருவாக்கப்படுகிறது.

இதற்காக மிகவும் நேர்த்தியான ஒரு பெரிய இடம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரமே இங்கு ஹாம்பர்க்கில் வசிக்கும் 3,00,000 பேர்கள் வேலை செய்துவருவார்கள்.

இப்போது ஹாம்பர்க்கின் நடுமையான ஆல்ஸ்டர் ஏரிப் பகுதியை கைவிட்டு விட்டு வேறு முக்கிய இடத்தை நடுநாயகமாக விளங்க வைக்கும் எண்ணமில்லை. அந்த இடத்திலுள்ள ஜன நெரிசலைக் குறைக்க வேண்டும் என்பதுதான் முக்கியமான எண்ணம்.

ஹம்பர்க்கின் தொழில், பொருளாதார, அரசியல் கலாசார முக்கியத்துவங்கள் இத்திட்டத்தினால் பாதிக்கப்படமாட்டாது. பக்கவாட்டத் தெருக்கள், பாதாளப் பாதைகள், பூமிக்கடியிலேயே மின்சார ரயில் வண்டி அமைப்பு, ஹெலிகாப்டர்கள் வந்து தங்குவதற்கான இடங்கள், பாதசாரிகள் நடப்பதற்கான ஒதுக்குப் புறப்பாதைகள் இவையெல்லாம் போக்கு வரத்துக்கள் எவ்வித தடையுமின்றி நடைபெற மிகவும் உதவும். இவற்றிற்கு நேரே நந்தவனங்களும் அமைக்கப்பட்டு ரமணியகரமான தோற்றம் ஏற்படவும் வழி செய்யப்படும்.

சர்வதேச ஸ்தாபனங்கள் வங்கிகள், தொழில் துறை அலுவலகங்கள் இவையெல்லாம் புதிய இடத்திற்கு மாறுவதற்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளன. இப்புதிய. உருவாக்கப்படவிருக்கும் பகுதி 220 ஏக்கர் விஸ்தீரணமுடையது. இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் பேராசிரியர் வெர்னர் ஹெபி-பிராண்டே ஆலோசகராக இருந்து வருவார். ஒவ்வொருவரிடமும் நிலத்தை விற்கு முன இப்படிக் கட்ட வேண்டும். இவ்வளவு இடம் சுற்றிலும் விடவேண்டும் என்பன போன்ற ஏராள நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அவர்கள் சம்மதம் பெறப்படுகிறது. கட்டடக்கலை போன்ற நிபுணர்கள் உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலிருந்தும் வந்து பங்கு கொள்ளும்படி டெண்டர்கள் கோரப்படுகின்றன. மோட்டார்களை "பார்க்" செய்ய போதுமான இடம் ஒதுக்கப்படும். இடத்திற்கான பூர்வாங்க அமைப்புக் கட்டடம் பூர்த்தியாகிவிட்டது.

இவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்க வேண்டுமென்ற நிபந்தனைப்படி கண்டிராக்டர்கள் வேலையை முடித்துக கொடுத்து விடுவார்கள். தெருக்கள், பூமிக்கடியில் சாக்கடை அமைப்பு போன்றவை பூர்த்தியாகிவிட்டன. ஹாம்பர்க் இம்மாதிரி ஒரு உதவி நகரம் பெற்று விளங்குவதில் உலகிலேயே முதல் நகரமாக இருக்கப் போகிறது.

## ஐயாறன் எழுதுவது

புதனன்று திரும்பிவிட வேண்டுமென்றுதான் கொழும்புக்குச் சென்றேன். ஓர் அன்பர் வந்து, சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு ஜயந்தி விழாவை நினைவூட்டினர். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் நடக்கும் மிக முக்கியமான கூட்டத்துக்கு அவசியம் செல்லவேண்டுமென்றும், அடுத்த நூற்றாண்டு விழாவுக்கு நாம் நிச்சயம் இருக்கமுடியாதென்றும் இடித்துச் சொன்னர்!

யாழ்ப்பாணத்துக்கு உடன் திரும்பிவிட வேண்டுமென்று ஒரு பக்கம் கடமை உணர்ச்சி. மறுபக்கம் சுவாமி விவேகானந்தருக்கு தலைநகரிலே அஞ்சலி செலுத்தும் விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று ஆசை. இரண்டுக்கும் போராட்டம். இடையே உடல் உபாதி நல்லதோர் வாய்ப்பாக வந்து, கொழும்பிலேயே தங்கி இருந்து விழாவிலும் கலந்துகொள்ளச் செய்துவிட்டது. நமக்கு வரும் உபாதிகளும்கூட, நம்மையுமறியாமல் நமக்கு ஏதோ நன்மை செய்வதை உணர்ந்தேன்.

* * *

அன்று மிஷனிலே கண்ட கூட்டத்தை என்றும் மறக்க முடியாது. ஏன் தெரியுமா? இந்து சமூகத்தைச் சேர்ந்த ஒரு சமய வீரருக்கு அஞ்சலி செலுத்த, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் அறிஞர்களும் முன்வந்து, ஒரே மண்டபத்தில் கூடியிருந்ததுதான். மத வேற்றுமைகள் நம்மைப் பிளவுபடுத்தி, ஒற்றுமைக்கு உலை வைக்கையில் பல மதத்தவர்களும் ஒன்றுசேர்ந்து, அங்கு அஞ்சலி செலுத்தக்கூடியிருந்தது, மிகவும் வரவேற்கத்தகக அபூர்வக் காட்சியாக இருந்தது.

அக்கூட்டத்திலே கத்தோலிக்கப் பெரியார் யாரும் கலந்துகொள்ளாதது ஒரு குறைதான். பிற மத ஸ்தாபனங்களுக்குச் செல்லக்கூடாதென்ற ஒரு சம்பிரதாயமே இதற்குக் காரணமென்று தெரிந்தது. ஆனல் காலம் மாறி, அத்துடன் பல வழக்கங்களும் மாறி வருவதைப் பார்க்கிறோம். கிறிஸ்தவர்களிடையே மட்டுமன்றி, பல பல மதங்களையும் சேர்ந்த ஆஸ்திகர்களிடையே புதிய ஒற்றுமை, உறவை ஏற்படுத்த, ரோமாபுரியும் முன்வருவதாக ஒரு செய்தியைப் படித்தேன். மகிழ்ச்சியாகஇருந்தது. நாஸ்திக சக்திகள் தலைதூக்கிவருவதால் ஏற்படும் மறைமுகமான நன்மை இது போலும்.

* * *

நல்ல பௌத்தரான நீதியரசர் பர்னண்டோ கூட்டத்துக்குத் தலைமைவகித்து, "பல சமய சகவாழ்வு"க்கு சுவாமி விவேகானந்தர் வழிகாட்டியதைப் பாராட்டினர். இந்து—பௌத்த ஒற்றுமைபற்றி சுவாமிகள் கூறிய பொன்மொழிகளை, கல்வி அதிகாரி டாக்டர் குருகே போற்றினர். யாழ்ப்பாணம் வைதீச்வர வித்தியாலயத்திலே, அக்காலத்திலும் இஸ்லாமிய மாணவருக்கு இஸ்லாம் கற்பித்து, சமய சமரசத்துக்கு வழிகோலியதையும், தாம் அங்கு கல்வி பயின்றதையும்பற்றி நன்றியுடன் பேசினர் செனட்டர் அஸீஸ். கல்வி அதிகாரியான ஸ்ரீமதி நவரத்னமும், பேராசிரியர் துரைசாமி சாஸ்திரியும், முறையே, சைவர்கள், சனதனிகள் சார்பாக சுவாமிக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஒரு குறை என்னவென்றால், மண்டபம் போதிய அளவு பெரிதாக இல்லாததுதான். ஏராளமான மக்கள் வெளியே நிற்கவேண்டியதாயிற்று. இக்குறையும் அடுத்த வருடத்துக்குள் தீர்ந்துவிடலாமென்றும், பெரிய மண்டபம் கட்டப்படுவதாயும் ஒரு மகிழ்ச்சியான

(5ம் பக்கம் பார்க்க)

# பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு தாமதமின்றிச் சம்பளம்

யாழ் பாணம், செவ். கடந்த ஆண்டு ஆசிரிய கலாசாலைகளில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய சம்பளங்களை உடனடியாக வழங்க வேண்டுமென்ற அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ்த் தராதரப் பத்திர ஆசிரிய சங்கக் கோரிக்கை பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடங்களில் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய ஆசிரியர்கள், கடமையேற்றவுடன் தங்கள் சம்பளங்களைப் பெற இரண்டு மூன்று மாதங்கள் சென்றன. இதனல் ஆசிரியர்களிற் பலரும் கஷ்டத்திற்குள்ளானர்கள். 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆசிரிய கலாசாலைகளில் இருந்து வெளியேறிய இரண்டாயிரத்துக்குமதிகமான ஆங்கில, சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் வெளிமாகாணங்களில் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இவர்களது சம்பளம் கடந்த வருடங்கள் போலத் தாமதிக்காது இம்மாத முடிவிலேயே கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ்த் தராதரப் பத்திர ஆசிரிய சங்கம் பிரதம கணக்காளரை கொழும்பு வித்தியா கந்தோரில் கடந்தவாரம் இரு தடவை சந்தித்துக் கேட்டுக் கொண்டது. சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதான் என்பதனை ஒப்புக்கொண்ட பிரதம கணக்காளர் அந்தந்த மாகாண உதவி வித்தியாபதிகளுக்கு சம்பள விபரங்கள் தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதும் உடனடியாக அவர்கள் பெற்ற சம்பளம் கொடுக்க முடியாவிட்டாலும் அடிபடைச் சம்பளத்தையாவது வழங்குமாறு அறிவிப்பதாகவும் சங்கத்தினரிடம் கூறியிருப்பதாகத் தெரிகிறது. பயிற்சிக் கலாசாலைகளில் இருந்து வெளியேறிய ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தை அந்த அந்த மாகாண வித்தியாகந்தோர்களுக்கு எழுதியோ, நேரிற் சென்றோ பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறியப்படுகிறது.

## கத்திக்குத்துக்கு தாயும் சேயும் பலி!

இரத்தினபுரி, திங்கள் கனேகொடையைச் சேர்ந்த எம். கே. லீலாவதியும் அவரது ஒரு மாதக் குழந்தை ஒன்றும் அவர்களது வீட்டில் கத்திக்குத்துக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். லீலாவதியின் கணவரான எஸ். எம். குணவர்த்தன பலத்த காயங்களுடன் எகிலியகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியை சுவாமிபிரேமாத்மானந்தா அறிவித்தார்.

இந்த ஸ்தாபனத்தை கொழும்பில் ஆரம்பித்தபோது, கல்லடி எதிர்ப்பு எல்லாம்கூட இருந்தனவாம்! ஆனல் இப்போது அதே ஸ்தாபனம் வரவர வளர்ந்து, சர்வசமய சமரசத்தையும், ஒற்றுமையையும், ஏற்படுத்தி, மேலான மக்கள் சேவையைச் செய்யக்காத்திருப்பதைக்காண எதிர்காலத்துக்குப் புதிய நம்பிக்கை அளிப்பதாகவுள்ளது.

* * *

தலைநகரிலே இவ்வளவு சிறப்பாக இந்த ஆரம்பவிழா நடந்து, பல முக்கியஸ்தர்களும் பங்குபற்றினரல்லவா? மறுநாள் "டெயிலி நியூஸ்" பத்திரிகையைப் பார்த்தேன். ஒரு வார்த்தைகூடப் போடவில்லை! ஏன் இப்படிப் பகிஷ்கரிக்க வேண்டும்? இதைப்பற்றி விசாரித்ததில், ஆங்கிலப் பத்திரிகைகளில் இந்து, சைவ ஸ்தாபன நிகழ்ச்சிகள் எதையும் வெளியிடும் வழக்கமில்லை என்றும், தமிழ்ப் பத்திரிகைகள் தான் அதற்கு இருப்பதாயும் ஓர் அன்பர் கூறினர்! அடகடவுளே!

அன்றைய நிகழ்ச்சிகளெல்லாம் ஆங்கிலத்தில்தான். மருந்துக்கும் ஒரு தமிழ் வார்த்தை கிடையாது. ஒரு பெரிய நீதியரசர், தமிழரல்லாதவர், தலைமைவகித்துப் பேசினர். மாஸ் கோவிலும்கூட சுவாமி விவேகானந்தர் நூற்றூண்டு ஜயந்தி விழா நடந்துள்ளதாம். இவ்வளவு முக்கியமான ஒரு நிகழ்ச்சியை, தலைநகரிலுள்ள ஆங்கிலப் பத்திரிகைகளெல்லாம் பகிஷ்கரித்து அலட்சியப்படுத்துவதாயின், இதில் ஏதோ அடிப்படையில பெரிய கோளாறு இருக்கவேண்டும். இந்த அநீதி எவ்வளவு சீக்கிரம் நீக்கப்படுகிறதோ. அவ்வளவும் அப்பத்திரிகைகளுக்கும், நாட்டுக்கும் நல்லதாகும்.

---

டெஹ்ரான், ஜன. 20 தாம் ஒரு கூர்க்கா என்று கூறி ஏமாற்றி இந்திய இராணுவத்தில் சேர்ந்துகொண்ட ஒரு சீனர் இங்கு கைது செய்யப்பட்டார்.

# நூற்றுக்கு மேற்பட்ட 'கள்ள பாஸ்போர்ட்'

## கொழும்புக்கு வந்த ஒரு சீனரிடம் கைப்பற்றப்பட்டன

### சர்வதேச மோசடிக்கும்பலைச்சேர்ந்தவரா?

கொழும்பு, திங்கள் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள விலை உயர்ந்த கற்களும், நகைகளும் மற்றும் மோசடி செய்யப்பட்ட நூற்றுக்கதிகமான 'பஸ்போட்'டுகளும் இலங்கைக்கு விஜயம் செய்த ஒரு சீனர்வசம் இருக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது! கொழும்பிலுள்ள உயர்தர ஹோட்டலொன்றில் கொழும்பு பொலிசார் நடத்திய திடீர் பரிசோதனைமூலம் இம் மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சர்வதேச மோசடி எனக் கருதப்படுகிறது.

இதுசம்பந்தமாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்மூலம் மோசடிகளைக் கண்டுபிடிப்பதில் இனிமேல் சிரமம் ஏற்படாது என்றும், கள்ளக் கடத்தல் செய்பவர்கள் கொழும்பை ஒரு மையமாகக் கொண்டுள்ளனரென்றும் கூறினர்.

கள்ளக் கடத்தல் செய்பவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறப்படும் கும்பனித் தெருவிலுள்ள பல வியாபார ஸ்தாபனங்களை பொலிசார் நேற்று சோதனையிட்டனர்.

பொலிசாரினல் கைப்பற்றப்பட்ட சில தஸ்தாவேஜுகளில் சில நகை வியாபாரிகளின் பெயர்கள் காணப்பட்டதால் அவர்களும் நேற்று விசாரனை செய்யப்பட்டனர்.

## 'பள்ளிக்கூட ஆசிரியர் இன்னும் தேவை'

### வித்தியாபகுதி அறிக்கைக்கு மறுப்பு

கொழும்பு, திங்கள் மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகள் அளவுக்கதிகமான ஆசிரியர்களைக் கொண்டிருப்பதாக வித்தியா பகுதியினர் விடுத்த அறிக்கையை ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்கமய மறுத்திருப்பதோடு தாங்கள் விசாரித்து அறிந்த மட்டில் மேல் மகாணப்பாடசாலைகளில் இன்னும் 500 ஆசிரியர்களுக்கு இடமிருப்பது தெரிய வந்திருக்கிறதென்றும் கூறியுள்ளது.

கொழும்பு மாவட்டத்திற்குள் இருக்கும் பாடசாலைகளில் மட்டும் 116 ஆசிரியர்களுக்கு இன்னும் தேவை இருக்கிறதென்றும் அதற்கு வெளியேயுள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் நான்கு அல்லது ஐந்து ஆசிரியர்களுக்கு காலி ஸ்தானங்கள் உள்ளனவென்றும் ஜாதிக சங்கமய தெரிவித்துள்ளது.

---

## கலைக்கழகதமிழ் நாடக குழுச் செயலாளர்

கொழும்பு, திங்கள் இலங்கைகலைகழகத்தின் தமிழ் நாடகக குழுவின் செயலாளராக திரு. கா. சிவத்தம்பி தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர். செயலாளர் பதவியை இவர் கடந்த ஆறு ஆண்டுகாலமாக வகித்துவந்துள்ளார். திரு. சிவத்தம்பிககு 72 வாககுகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. சி. வி. ராஜசுந்தரத்திற்கு மூன்று வாககுகளும் கிடைத்தன. தமிழ் நாடகக குழுவின் புதிய தலைவரான டாகடர் பாலேந்திரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத் தெரிவு நடைபெற்றது.

# லொறி விபத்தில் 4குழந்தைகள் பலி!

கொச்சிக்கடை, திங்கள் லொறியொன்று பாதையை விட்டு விலகி கடையொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு குழந்தைகள் மரணமானர்கள்! மற்றும் சிலர் பலத்த காயங்களுடன் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மரக்கறிகளை ஏற்றிக் கொண்டுவந்த ஒரு லொறி, கொழும்பு-புத்தளம் வீதியிலுள்ள கட்டுவ என்ற இடத்திலுள்ள ஒரு கடையுடன் மோதி விபததுக்குள்ளானது, இதன் காரணமாக கட்டுவ என்ற இடத்தைச் சேர்ந்த ஜே. ஜே. ஷெல்டன் (10வயது டபிள்யு. ரஞ்சனி பெர்னடைத் பெரேரா (10 வயது), ஜே. ஏ. வி. அன்னிரஞ்சனி (10 வயது), ஜே. ஏ. ஏ. செபஸ்தியான் (5 வயது) ஆகிய நான்கு குழந்தைகளும் ஸ்தலத்திலேயே மரணமானர்கள். இச்சம்பவம் நேற்று மாலை நடைபெற்றது.

பொருள்கள் வாங்கும்பொருட்டு அக்கடைக்குச் சென்ற சிலரும், இவ்விபத்தின் காரணமாக காயமடைந்து நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மரணமடைந்த நான்கு குழந்தைகளில் இருவர் கடைச்சொந்தக்காரரின் குழந்தைகளாகும்.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி குறிப்பிட்ட லொறிச் சாரதியை 2,000 ரூபாய்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு அடுத்தமாதம் 11-ம் திகதி நீர்கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜராகும்படி எச்சரிக்கை செய்தார்.

---

## காரசாரமான விவாதம்

கல்கிசை, திங்கள் தெஹிவளை-கல்கிசைமாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் காரசாரமானவிவாதமொன்று நடைபெற்றது. வரிகளைச் சேகரிப்பதற்கு வரிசேகரிப்பாளர்கள் மீண்டும் நியமிக்கப்பட வேண்டுமென்று மாநகரசபை அங்கத்தவர்கள் சிலர் கேட்டுக் கொண்டதைத்தொடர்ந்து இவ் விவாதம் இடம்பெற்றது. இருந்தபோதிலும் இதுசம்பந்தமான தீர்மானம் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட .

## கலைக்கழக நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய் ஒவ்வொரு பாடசாலைகளிலும் நாடகக் குழுக்கள் அமைப்பது நன்று என்ற அபிப்பிராயம் கல்வி இலாகா மேலதிகாரிகளிடம் இருப்பதாகத் தெரிகிறது. இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக்குழு இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் கலந்து கொள்ளக்கூடியதாக நடத்தவிருக்கும் நாடகப் போட்டியில் கலந்து கொள்ளும்படி பாடசாலை அதிபர்களுக்கு வித்தியாதிபதி சுற்றுநிருபம் ஒன்று அனுப்பவிருப்பதாகத் தெரிகிறது. அந்தச் சுற்றுநிருபத்திலேதான் பாடசாலைகளில் நாடகக்குழுக்களை அமைக்கும் யோசனை தெரிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நியமனப்பத்திரம்

யாழ்ப்பாணம், செவ்வாய் நீர்வேலி கிராமசபையின் 12-ம் வட்டாரத்திற்கான நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் 8-ந் திகதி ஏற்றுக் கொள்ளப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## எல். எஸ்.எஸ். பி.யின் பிரதம கொறடா

கொழும்பு, திங்கள் லங்காசமசமாஜக் கட்சியின் பிரதம கொறடாவாக அகலவத்தை எம். பி. திரு. அனில் முனசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார். சமசமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரெரா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. முனசிங்கா ஏகமனதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

## களியாட்டவிழா

பிலியந்தலை, திங்கள் மொறட்டு வித்தியாலய கட்டிட நிதிக்காக இன்று முதல் வெள்ளிக்கிழமை வரை களியாட்டபொருட்காட்சி விழாமொறட்டுவித்தியாலயத்தில் நடைபெறும். களியாட்டவிழாவை அம்பலாங்கொடை எம்.பி. திரு. பி. டி. எஸ். எஸ். குலரத்னதிறந்து வைத்தார்.

## தெல்லிப்பழை கிராம சபை

### திரு. கதிரையாண்டி ராஜினமா

யாழ்ப்பாணம், செவ்வாய் தெல்லிப்பழை கிராமசபைத் தலைவர் திரு. கு. கதிரையாண்டி தமது தலைவர் பதவியை அடுத்த மாதம் 14ம் திகதி ராஜினமாச் செய்துவிடுவதர்கள் தலஸ்தாபன கமிஷனருக்கு அறிவித்திருக்கிருர். திரு. கு. கதிரையாண்டி அரசாங்க பாடசாலையொன்றில் ஆசிரியப் பணிபுரிந்துவருவதினலேதான் தலைமைப் பதவியை ராஜினமாச் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. திரு. கு. கதிரையாண்டி தலைமைப் பதவியை ராஜினமாச் செய்வதனைத் தொடர்ந்து ஏற்படும் தலைவர் பதவி ஸ்தானத்தைக் கைப்பற்ற இப்போதிருந்தே சிலர் ஆதரவு தேட ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

---

## கம்யூனிஸ்ட் வாலிபர் மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்வாய் கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் மகாநாடு யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இம் மகாநாட்டை விரிவாகச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. தமிழினத்தின் தாழ்வுற்ற நிலையும் ஒடுக்கப்பட்ட மக்களின் தீண்டாமைத் துயரும் தமிழ் மக்கள் மத்தியில் தீராத பிரச்னைகளாக இருந்துவருவதனல் அவற்றை இலங்கை வாழ்க்கைநிலைகளோடு இணைத்து இம் மகாநாட்டில் பரிசீலனை செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## பிரதமரின் குருநாக்கல் விஜயம்

குருநாக்கல், திங்கள் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அடுத்தமாதம 2-ம் திகதி குருநாக்கலுக்கு விஜயம்செய்யவிருக்கிருர். இப் பகுதிகளில் ஏற்பாடாகியிருக்கும் பல வைபவங்களில் பிரதம மந்திரி கலந்துகொள்வார். அவருக்குப் பிரமாதமான வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

# சைவாசிரிய கலாசாலையை மூடும் யோசனை

## வடஇலங்கைத் தமிழ் ஆசிரியர் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய் திருநெல்வேலி சைவாசிரிய காலாசாலை கல்விப்பகுதியினரால் மூடப்படுவதனை ஆட்சேபித்து வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது. தமது ஆசேபத்தை மேலதிகாரிகளுக்கு தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கக்கூட்டம் ஆசிரியர் சங்க அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை திரு. ஆர். கந்தையா தலைமையில் நடைபெற்றது.

வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தலைவரான காலஞ்சென்ற வித்துவான் எஸ். ஆர். கந்தசாமியின் பணிகளை நினைவுகூரும் வகையில் தமிழாசிரியர் வருடாந்தக் கூட்டத்தில் அவருடைய உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வைபவம் நிகழும் கூட்டத்தின் போது மகிழ்ச்சி தரக்கூடிய எந்த நிகழ்ச்சியையும் நடத்துவதில்லை என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தை அடுத்தமாதம் முற்பகுதியில் நடத்துவதென முடிவு செய்து, அக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான பிரேரணைகளும் பரிசீலனை செய்யப்பட்டன.



# மாணவர் மலர்



## தமாஷ் போட்டி : 3

தமாஷ் போட்டி இலக்கம் இரண்டிற்குச் சரியான பதிலை பலர் எமக்கு எழுதியிருந்த போதிலும், சுவையுடனும் ஹாஸ்யத்துடனும் எவரும் எழுதவில்லை. ஆகையினால் ஓரளவு சுவையுடன் கூடியதாக எழுதியுள்ள பதிலை நாம் இவ்வாரம் பிரசுரிக்கின்றோம். இந்தப் பதிலை யாழ்ப்பாணம் அஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த 'டில்க்காதனு' எழுதியிருக்கிறார். இவருக்கும் மற்றும் கீழ்வரும் நால்வருக்கும் எமது பாராட்டுதல்கள். முதலில் பாலுவின் கேள்விக்கு நேசன் அளித்திருக்கும் பதிலைக் கவனிப்போம்.

⁂ ⁂ ⁂

பாலு: அதென்ன ... எப்ப பார்த்தாலும் நீங்கள் என்னிடமே கடன் கேட்கின்றீர்கள்...?

நேசன்: நீங்கள்தான் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்காத ஆளாச்சே.......!

⁂ ⁂ ⁂

ஓரளவு சரியான பதிலை அனுப்பியுள்ள நால்வரின் பெயர்கள் வருமாறு:- செ. ஆனந்தசிகாமணி, [illegible] வெட்டி மேற்கு; பொ. செல்லவேல், அச்சுவேலி; ம. சுப்பேந்திரன், கரவெட்டி; கு. தெய்வநாயகி, சூராவத்தை.

தமாஷ் போட்டி இலக்கம் மூன்று, வருமாறு:—

⁂ ⁂ ⁂

ஆசிரியர்:- டாக்டர் சார்! உங்கள் மகன், காலையில் வகுப்பில் வேறு ஒரு பையனின் தலைமீது கல்லை எறிந்துவிட்டான். அந்தப் பையன் மயக்கமாகவிருக்கின்றான் ஸார்!

டாக்டர்:- ?.. ...?......?

⁂ ⁂ ⁂

ஆசிரியர் கூறியதற்கு, டாக்டர் (சுவையுடன) அளித்த பதில் என்ன? உங்களுக்குத் தெரிந்தால் எமக்கு இம்மாதம் 31-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சுவையுடனும் ஹாஸ்யத்துடனுமெழுதிய ஐவரின் பெயர்கள் இப்பகுதியில் இடம் பெறும்.

## உங்கள் பிரச்னை

ரி. எம். இராமக்கிருஷ்ணன், ஆஸ்பத்திரி வீதி, கரம்பன் கிழக்கு: "எனது தைப்பொங்கல் வாழ்த்துக்கள். புதுவருடத்திலிருந்து புதிய பல பகுதிகள் எமது மாணவர் மலரில் வெளியாகும் என எதிர்பார்க்கின்றேன்."

சி. ஐ. டி. ஷகானுக்கும், சாந்தாவுக்கும் நீங்கள் அனுப்பியிருந்த பொங்கல் வாழ்த்துக்களுக்கு அவர்கள் நன்றி கூறச் சொன்னார்கள். தங்களின் புகைப்படங்கள் கைவசமில்லையென்றும் உங்களுக்குக் கூறும்படி அவர்கள் சொன்னார்கள். புதிய பகுதிகள் விரைவில் ஆரம்பமாகும்.

⁂ ⁂ ⁂

பி. கண்ணபிரான், வேலணை: "ராஜாராம் கொலை வழக்கில் 'செண்ட்' வாசனையைக்கொண்டு எப்படி சி. ஐ. டி. ஷகான் வசந்தனைக் கைதுசெய்ய முடியும்? அந்த 'செண்டை' எத்தனையோ கோடிமக்கள் உபயோகிக்கிறார்கள். ஆகையினால் சி. ஐ. டி. ஷகான் ஒரு நிரபராதியையே கைதுசெய்திருக்கிறார்!"

சிக்கலான பல கொலைவழக்குகளை சில நாட்களுக்குள் தீர்த்து வைக்கும், சி. ஐ. டி. ஷகான் இதுவரை நிரபராதிகளைக் கைதுசெய்யவுமில்லை இனிமேல் கைதுசெய்யப் போவதுமில்லை! ராஜாராம் கொலை வழக்கில சம்பந்தப்பட்ட சிலரை சி. ஐ. டி. ஷகான் விசாரணை செய்தார். விசாரணை செய்யப்பட்டவர்களில் ஒருவர் நிச்சயமாக கொலையாளியாகவிருப்பார் என்பதும் மேலேயில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொலைசெய்யப்பட்ட ராஜாராமுக்கு அருகிலிருந்த கைலேஞ்சியிலிருந்து வீசிய 'செண்ட' மணம், வசந்தனிலும் வீசியது. குறிப்பிட்ட செண்ட்டை ஆயிரம் பேர் உபயோகித்திருந்தாலும், குறிப்பிட்ட இடத்தில் சந்தேகத்திற்கு வழிகோலும் முகமாக வசந்தனில் வீசிய 'செண்ட்' மணம், வசந்தன்தான் குற்றவாளியென்பதை எடுத்துக்கூறி விட்டது! வசந்தன் குற்றவாளி என்பதற்கு 'செண்ட்' மண முமொன்றே போதும்!

## அறிவுச் செல்வம்

முட்டையிட்டு பால் கொடுக்கும் மிருகத்தின் பெயர் டக்பில் ஆகும். இம்மிருகம் அவுஸ்திரேலியாவில் வசிக்கிறது; புகையிலையை முதன் முதல உபயோகித்தவர் சர். வால்டர் அலி ஆகும்; எச். ஜி. வெல்ஸ் என்பவர்தான் சந்திரமண்டலத்தைப்பற்றி முதன் முதல் எழுதியவராகும்; புறா, கிளி, வெளவால், தீக்கோழி என்பனவற்றில் பறவை இனத்தைச் சேராதது வெளவாலாகும்.

—ரவி,
யாழ்ப்பாணம்.

முதலாவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி, கிரேக்க நாட்டில் கிறிஸ்துவுக்கு முன் 776-வருடத்தில் நடைபெற்றது; 17-ம் நூற்றாண்டில் தான் முதல் முதல் பண நோட்டுகள் உபயோகத்திற்கு வந்தது; சோவியத்ரஷ்யாவில் 22 தேசிய மொழிகள் உண்டு.

—ச. பேரானந்தன்,
வண்ணார்பண்ணை.

கம்பியில்லாத் தந்தியை முதலில் கண்டுபிடித்தவர் மார்க்கோனி; பிரமிட் கோபுரங்களைக் கட்டியவர்கள எகிப்தியர்.

—எஸ். சாந்திகுமார்
வட்டுக்கோட்டை.

⁂ ⁂ ⁂

இராமேஸ்வரம் கோயிற் பிரகாரமதான் நீண்ட பிரகாரம ஆகும். அதன் நீளம் 4000 அடி; மிகச் சிறியபறவை, ஹங்கார்ப பறவையாகும்.

—கே. குஷிநாதன்,
காரைநகர்.

## சந்தேகம் தீருங்கள்

ஜி. எம்.

'டில்க்கா', யாழ்ப்பாணம்.
கேள்வி: உலகத்தில் மொத்தம் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?
பதில்: 3,064-க்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றனவாம்!

⁂ ⁂ ⁂ ⁂

ஆர். ராஜேஸ்வரி, சுன்னாகம்.
கேள்வி: உலகில் எத்தனை தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன?
பதில்: சுமார் 7,200 தினசரிப்பத்திரிகைகள் வெளியாகின்றன.

⁂ ⁂ ⁂ ⁂

எஸ். கமலா, விமலா, பண்டத்தரிப்பு.
கேள்வி: கைதட்டும் பழக்கத்தை யார் அறிமுகம் செய்து வைத்தனர்?
பதில்: நல்ல கேள்வி கேட்டீர்கள். ஆனால் உங்களின் கேள்வி விளக்கமாகக் காணப்படவில்லை. கைதட்டுவதென்றால் எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்? சாதாரணமாக ஒருவரை அழைப்பதற்கு கைதட்டும் பழக்கத்தையா அல்லது ஒருவரைப் பாராட்டும்முகமாக கைதட்டும் பழக்கத்தையா? ஒருவரைப் பாராட்டும் நோக்கத்துடன் கைதட்டுவதை முதன்முதல் உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் பண்டைய உரோமர்கள்தான்!

⁂ ⁂ ⁂ ⁂

எஸ். இந்திராணி, மாதகல்.
கேள்வி: துருக்கறையை எப்படி நீக்கலாம்?
பதில்: ஒக்சாலிக் அமிலத்தை நீரில் கரைத்துக் கொண்டு கறைபட்ட இடத்தை அதில் ஊற வைத்தால் போதும். இல்லாவிடில் கறைபட்ட இடத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து, சவர்க்காரம் போடுவதன் மூலமும் கறையை நீக்கலாம்!

⁂ ⁂ ⁂ ⁂

எம். ராஜநேசன், மிருசுவில்.
கேள்வி: உணவுப் பொருள்களை மிகக் குறைந்த நேரத்தில் சமைக்கும் கருவி இருக்கிறதா? இருந்தால் அதன் பெயரைக் கூறவும்.
பதில்: இந்த விஞ்ஞான யுகத்தில் 'இல்லை' என்ற வார்த்தைக்கே அர்த்தமில்லை. விரைவாகச் சமைக்கும் கருவியின் பெயர் 'பிரெஷர் குக்கர்'!

⁂ ⁂ ⁂ ⁂

கே. பி. ஐயர், பருத்தித்துறை.
கேள்வி: நெசவு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்கள் யார்? எத்தனையாம் ஆண்டில்?
பதில்: 1769-ம் ஆண்டில் ரிச்சர்ட்ஆக்ரைட் என்பவர் கண்டுபிடித்தார்.

⁂ ⁂ ⁂ ⁂

ஆர். மனோஹரி, வசாவிளான்.
கேள்வி: அச்சு இயந்திரத்தை யார், எத்தனையாம் ஆண்டில் கண்டுபிடித்தார்?
பதில்: கூடன்பேக் என்பவர் 1450-ம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

⁂ ⁂ ⁂ ⁂

எஸ். ஜோசப், கந்தர்மடம்.
கேள்வி: மக்னீஷியக் கம்பியை எரித்தால் அதன் சாம்பலின் எடை குறைவாகவிருக்குமா?
பதில்: இல்லை. மக்னீஷியக் கம்பியின் எடையிலும் பார்க்க அதன் சாம்பல் அதிகமாகத்தான் இருக்கும்!

⁂ ⁂ ⁂ ⁂

வ. காந்திமதிநாதன், கரவெட்டி.
கேள்வி: ஊற்றுப் பேனாவைக் கண்டுபிடித்தவர் யார்?
பதில்: வாட்டாமென் என்பவர் 1863-ம் ஆண்டில் அமெரிக்காவில் கண்டுபிடித்தார்.

⁂ ⁂ ⁂ ⁂

எம். மாரிமுத்து, சுன்னாகம்.
கேள்வி: ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
பதில்: ஆகாயவிமானத்தை றைட் சகோதரர்கள் கண்டுபிடித்தனர்.

⁂ ⁂ ⁂ ⁂

எஸ். மலர்வதனி, சங்கானை.
கேள்வி: ஜெய்ப்பூரிலுள்ள சாம்பார் ஏரி விசேஷமானதாம். அதைப்பற்றிச்சிறிது சொல்லுவீர்களா?
பதில்: எண்பது சதுரமைல் விஸ்தீரணமுள்ள இந்த ஏரியின் நீர், வருடத்தில் எட்டு மாதங்கள் ஓரே உப்பாகவும் நான்கு மாதங்கள் சுத்தமான குடிக்கும் நீராகவும் இருக்கும். அக்டோபர் தொடக்கம் மேமாதம்வரை இந்த ஏரியிலிருந்து 2,00,000 தொன் உப்பு எடுக்கப்படுகிறது.

⁂ ⁂ ⁂ ⁂

எல். ராஜலட்சுமி, திருக்கோணமலை.
கேள்வி: திரு. டாங்கே யார்?
பதில்: டாங்கே என்ற பெயரில் பலர் இருக்கலாம். ஆனால் பத்திரிகைகளில் அடிக்கடி தோன்றும் திரு. டாங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகும்.

⁂ ⁂ ⁂ ⁂

'மாணவர் மலர்ப்பிரியன', மட்டுவில்.
கேள்வி: வானவெளிப் பயணம் எப்படி இருக்கிறது?
பதில்: எனக்கு அந்த 'சான்ஸ்' இன்னும் கிடைக்கவில்லை. பிரயாணம் செய்தபின் பிரயாணதைதப்பற்றி எழுதுகின்றேன்.

⁂ ⁂ ⁂ ⁂

அன்புமணி, பிரதானவீதி, திருக்கோணமலை.
கேள்வி: மலர்களை நாம் மணக்கலாமா?
பதில்: நல்ல கேள்வி இது. மலர்களை நாம் மூக்கில் வைத்து ஒருநாளும் மணக்கக் கூடாது! சில சின்னஞ்சிறிய பூக்களின் நறுமணம் சிலவேளைகளில் எங்களை மயக்கி விடுகின்றன. அநேகமாக எல்லோருமே இப்படியான நறுமணமுள்ள பூக்களைப் பறித்து மூக்கில் வைத்து மணக்கிறார்கள். இது கூடாது. சின்னஞ்சிறிய பூக்களிலும் நமது கண்களுக்குத் தெரியாத, தெரிந்த பூச்சிகள் இருக்கின்றன. பூக்களை ஆசையுடன் மணக்கும்போது இப்பூச்சிகள் நமது மூக்கில் நுழைந்து விடுகின்றன. ஆகையினால் நாம் எப்பொழுதும் பூக்களைக் கையிலெடுத்து தூரத்தில் வைத்து மணப்பதே சிறந்தது. மூக்கிற்கு அருகில் வைத்து மலர்களை எப்பொழுதும் மணக்கக் கூடாது.

## மூளைக்கு வேலை

மூளைக்கு வேலைப் பகுதி உங்களின் மூளைக்கு நல்ல வேலையைக் கொடுத்துவிட்டது என்பது கடந்த வாரத்துக்கு முந்திய வாரம் நாம் கேட்ட கேள்வியிலிருந்து நன்கு தெரிகிறது. கடந்த வாரத்துக்கு முந்திய வாரம் நாம் கேட்ட கேள்விக்கு இருவர் மட்டுமே சரியான விடையெழுதியிருக்கின்றார்களென்றால், குறிப்பிட்ட அந்தக் கேள்வி உங்களில் எத்தனை பேரின் மூளையை நன்கு 'கலக்கி' விட்டது என்பதை நாம் இங்கு சொல்லாமலே நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கின்றோம்.

கடைசியாக நாம் கேட்ட கேள்வியின் சரியான விடை: "குறிப்பிட்ட பஸ்ஸை செலுத்திய சாரதி புதியவராகும். பஸ்ஸுக்காகக் காத்து நின்றவர் இ. போ. ச. அதிகாரிதான் என்பது புதிய பஸ சாரதிக்குத் தெரியாது!"

எமது பாராட்டுதல்களுக்குரிய சரியான விடையனுப்பிய இருவரின் பெயர்களும் வருமாறு: நாகேந்திரன், உடுவில் மேற்கு, சுன்னாகம்; ஆர். ராஜேஸ்வரி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### இவ்வாரக் கேள்வி

எனது தங்கைகளான வசந்தியும், அமுதாவும், தம்பி கஜேந்திரனும், சின்னமாமாவுடன் கதைத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென மாமா ஒரு கேள்வியைக் கேட்டார். 'எரிமலைகள் பொங்கி வழிவதனால் உருகிவரும் பொருள், சாம்பலாகுமல்லவா? அந்தச் சாம்பலின் சூடு தணிவதற்கு சுமார் எத்தனை வருடங்களாகும்?' என்று கேட்டார் மாமா. சிறிது நேரம் அமைதிநிலவியது. பின்னர் தங்கை வசந்தி அறுபது (60) வருடங்கள் என்று சொன்னாள். தம்பி கஜேன் எண்பது (80) வருடங்கள் என்றான். இதைத் தொடர்ந்து தங்கை அமுதா நூறு (100) வருடங்கள்

(7-ம பக்கம்பார்கக)

## துப்பறிய முடியுமா?

கடந்த வாரத்துக்கு முந்திய வாரம் நாம் கேட்ட கேள்விக்கு பலர் விடையளித்திருந்தபோதிலும், ஒரு சிலர் மட்டுமே சரியான விடையெழுதியிருக்கின்றார்கள். இருந்தபோதிலும் துப்பறிவதில உங்களுக்கு இருக்கும் திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது!

கஜநாதனைக் கொலைசெய்தவர் 'யார்'? மாடசாமியா? பின்னர்...? கஜநாதனின் உயிருக்குயிரான நண்பர் மாடசாமி. அதுபோல் மாடசாமியின் உயிர் நண்பர் கஜநாதன். அப்படியிருக்கையில் மாடசாமி, கஜநாதனை எப்படிக் கொலை செய்திருக்க முடியும்? அப்படியென்றால் கொலையாளி யார்?

கஜநாதனின் மரணத்துக்கு காரணமாகவிருந்தவர் மாடசாமியின் 'அல்சேஷன்' நாய்தான்! நீண்ட நாட்களுக்குப் பின்னர் கஜநாதன், மாடசாமி

(7 ம் பக்கம பார்க்க)

# "தொழிலில் உயர்வு தாழ்வு இல்லைஎன்பதைஉணரவேண்டும்"

## இளைஞருக்கு திரு. அமிர்தலிங்கம் புத்திமதி

## பனம்கள்ளை ஏற்றுமதி செய்ய பாஸ்கரன் யோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

'இன்றைய மாணவர்களின் எதிர்காலம் மிகவும் இருள்சூழ்ந்ததாக உள்ளது. சமுதாய நலனுக்காக உழைக்கக்கூடியவர்கள் எம்மிடையே தோன்ற வேண்டும். தன்னம்பிக்கை மிக்கவர்களாக மாணவர்கள் வாழ்ந்தால் தான் எதிர்காலத்தை வளமுடையதாக்க முடியும்.'

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் அளவெட்டி கலாசேவை சனசமூகநிலைய பாலர் கழக ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'நமது முன்னோர்கள் காற்றின் உதவிகொண்டு இயங்கும் சிறிய மரக்கலங்களின் துணையோடு பலமைல் தூரம் கடலில் சென்று நாடுகளைப்பற்றி அறிந்துகொண்டதோடு வாணிபத்தைப் பெருக்கியதுடன் பிற இடங்களில் குடியேறியும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இப்பரம்பரையில் வந்தவர்கள் இன்று அயற்பிரதேசங்களில் குடியேற அஞ்சுகின்றனர். இந்த அச்சம் வருங்கால மக்களைப் படுகுழியில் விழுத்திவிடும். இன்றைய மாணவர்கள் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்பதனை உணரவேண்டும். எத்தொழிலையும் செய்ய அவர்கள் தயாராகவேண்டும்.

### மீன்பிடித் தொழிலில் மாணவர்கள்

எமது நாட்டைச் சுற்றியுள்ள கடலில் பெருஞ் செல்வமுண்டு. நமது கடல்களில் காணப்படும் மீன்களைப் போல வேறு எந்தக் கடலிலும் காணமுடியாது. மீன்பிடித் தொழிலில் மாணவர்கள் துணிந்து ஈடுபடவேண்டும். தரிசு நிலங்களில் குடியேறவேண்டும். இத்தரிசு நிலங்களில் நாம் குடியேற மறுபோமாயின் அவை காலகதியில நம்மையே அழித்துவிடும்.

தமிழ் மக்கள் கூட்டாகத் தொழில் செய்ய முன்வரவேண்டும். இதனாலே தான் நாமும் நமது சமுதாயமும் சுபிட்சமடைய முடியும்.

### சமஷ்டிதான் பொருத்தம்

ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்த மயிலிட்டி கிராமசபை முன்னாள் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

"நமது நாட்டுக்கு சமஷ்டி அரசியலே உகந்தது- சமஷ்டி ஆட்சி பெறுவதற்கு இரு தரப்பினரும் ஒத்துவரவேண்டும். நமக்கு மேலும் மேலும் உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் நாம் பிறநாட்டுடன் தொடர்பு கொள்ளவேண்டிய நிலை தோன்றக்கூடும்.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பொருளாதாரம் நன்கு கவனிக்கப்படவில்லை. பல வழிகளிலும் அதனைப் பெருக்கவேண்டும். இலங்கையின் மிகச் சிறந்த வியாபாரப் பொருளாக யாழ்ப்பாணப் பனங்கள்ளைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யலாம். இதனால் பெரும் பொருள் சம்பாதிக்க முடியும். எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தியாக்கிக் கொண்டால் எமக்கு எதுவித கஷ்டமுமில்லை. முருங்கன், முறிகண்டி, தணுக்காய் ஆகிய பிரதேசங்களில் பருத்தி உற்பத்தியாக்கலாம். தமிழர் தம்மிடமுள்ள மூலதனங்களையெல்லாம் தொழில அபிவிருத்திக்காக ஈடுபடுத்தவேண்டும்.

### அசட்டுத் துணிவு தாழ்வுக்குக் காரணம்

வித்துவான் க. ந. வேலன் பேசும்போது, மக்கள் நல்லவர்களாக இருப்பின் ஆட்சியும் நன்ருக அமையுமெனவும், மனிதனின் முன்னேற்றத்திற்குப் பயபக்தி அவசியம் என்று குறிப்பிட்டு, பயமும் பக்தியுமில்லாத அசட்டுத் துணிவுடமைதான் இன்று நமக்கெல்லாம் தாழ்வு தந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், 'மனைக்கு ஒளிபோல உள்ளவள் மனைவியே என்றும் விருந்தினரைப் போற்றுதலே வாழ்க்கையின் சிறந்த அம்சமெனவும், கணவன் வருவாய்க்குத் தக வாழ்வதே மாண்புடமை என்றும் குறிப்பிட்டார்.

அபிநயப்பாட்டு, நடனம், 'பாசத்தின் பரிசு' நாடகம் என்னும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. செல்வன் த. ஸ்ரீகாந்தன் நன்றி கூறினர்.

---

## துப்பறிய முடியுமா?

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் வீட்டுக்குச் சென்றிருந்தபடியால் மாடசாமியின் அருமை நாய் கஜநாதனின் உயிருக்கு உலை வைத்துவிட்டது.

சரியான விடையை எழுதியவர்களின் பெயர்கள் வருமாறு: மு. இரத்தினசிங்கம், கணேசபுரம், கிளிநொச்சி; சி. கணபதிப்பிள்ளை, கிளிநொச்சி; க. சிறிரவிகுலன், தெல்லிப்பளை; செ. ஆனந்தசிகாமணி, சரவெட்டி; த. குகனருள் தம்பி, இணுவில்; ச. பாலகுமாரசாமி, ஏழாலை; மு. குமாரநாயகம், சுன்னாகம்; கே. குஷிநாதன், களபூமி, காரைநகர்; க. வரதாடசாயணி, தெல்லிப்பளை; நா. இரத்தினவரதி, சித்தங்கேணி; பொ. செல்லவேல், அச்சுவேலி; ச. கந்தசாமி, கோவிலாககண்டி.

### உங்கள் கவனத்துக்கு!

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இரட்டைக்கொலை சம்பந்தமாக வந்த அழைப்பின்பேரில் சி. ஐ. டி. ஷகான் கொழும்பு சென்றிருப்பதால் உங்களை இவ்வாரம் அவர் சந்திக்காது போய்விட்டார். மீண்டும் உங்களை சி. ஐ. டி. ஷகான் அடுத்தவாரம் சந்திப்பார்! பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பியவர்களுக்கு தமது வாழ்த்துக்களை சி ஐ.டி. ஷகான் தெரிவிக்கச்சொன்னார்!

—"சி. ஐ. டி."

## மூளைக்கு வேலை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொன்னாள். இதையெல்லாம் எனது அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டு ராமு, 'இல்லை...எல்லோரும் இருபது வருடங்களால் அதிகரித்துச் சொல்லிக்கொண்டேபோகிறீர்கள்; உண்மையில் நூற்று இருபத்தைந்து (125) வருடங்கள் தான் செல்லும்' என்று சொன்னான். எல்லாவற்றையும் கேட்டுககொண்டிருந்த மாமா திடீரென என் பக்கம் திரும்பி 'சாந்தா... நீ சொல்பார்க்கலாம்?' என்றார் "வசந்தி அமுதா, கஜேந்திரன், ராமு கூறிய விடைகளில் ஒரு விடை சரியானது" என்றேன் நான். சரி... அப்படியென்றால் அந்தச் சரியான விடையை உங்களாற் கூறமுடியுமா? ஒருவர், ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை எழுதக்கூடாது. உங்களின் சரியான விடையை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக மாணவர் மலர், 'ஈழநாடு' த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஆமாம்...பொங்கல் வாழ்த்துக்களை அனுபிய அனைவருக்கும் எமது நன்றி.

— சாந்தா

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 22-1-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு: 7-00 நேயர் விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 எஸ். சோமசுந்தரம்—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை: 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 டி. எஸ். பகவதி—பாட்டு.

பகல்: 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை: 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு: 7-30 எது இலக்கியம்?—பேச்சு, 7-45 சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம்-பாட்டு, 9-15 'பரிசில்'—நாட்டுப் பாடல் தொகுப்பு நிகழ்ச்சி, 9-45 கலைச் சொல் கேளீர், 9-55 இடைவேளை இசை.

---

## பிரதமரின் குருநாக்கலை விஜயம்

குருநாக்கலை, திங்கள்

அடுத்தமாதம் இரண்டாம் திகதி குருநாக்கலைக்கு விஜயம் செய்யவிருக்கும் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவுக்கு ஒருமகத்தான வரவேற்பளிக்க ஏற்படுகள் செய்யப்பட்டு வருகின்றன. இசை, நடனம், களியாட்டவிழா ஒன்றைப் பிரதமர் இங்கு திறந்துவைப்பார்.

---

கிரிக்கெட்

## ஹாட்லி கலந்துகொள்ளும் போட்டிகள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெப்ரவரி, மார்ச் மாதங்களில் பின்வரும் கல்லூரிகளுடன் கிரிக்கெட் போட்டியில் ஈடுபடவிருப்பதாகத் தெரியவருகிறது. பெப்ரவரி 8-ம், 9-ம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியுடனும் 15-ம், 16-ம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடனும் 18-ம், 19-ம் திகதிகளில் கண்டியைச் சேர்ந்த சென். சில்வேஸ்டர் கல்லூரியுடனும் 22-ம், 23ம் திகதிகளில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியுடனும் மார்ச் மாதம் 1-ம், 2-ம திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரியுடனும் 8-ம், 9-ம் திகதிகளில் சென். பட்ரிக்ஸ் கல்லூரியுடனும் 15-ம், 16-ம் திகதிகளில் யர்ழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடனும் 22-ம், 23-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியுடனும் போட்டி ஆட்டங்களில் கலந்துகொள்ளும்.

---





நாளுக்கு நாள்
கடின பாவனைக்கு
நிகரற்று
விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/113

## ஆள்மாருட்ட மோசடி வழக்கு

### 5-ந் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஆள் மாருட்டத்துடன் மோசடி செய்ததாக காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் அரசரத்தினம் மீது குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜோகரனல் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேலதிகமாஜிஸ்திரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

மாஜிஸ்திரேட் தீர்ப்பளிப்பதை அடுத்தமாதம் 5-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்,

---

## சூதாடியதாக வழக்கு

### ஒரு எதிரிக்கு வாரண்ட்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடந்த கார்ணிவலில் சூதாடியதாகக் குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது எதிரிகளில் ஒருவரான கபிரியல் ஜோன் என்பவர் கோர்ட்டில் ஆஜராகவில்லை. அவர்மீது வாரண்ட் பிறப்பித்த மாஜிஸ்திரேட் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்,

---

## 332 இந்தியர் மாண்டனர்

புதுடில்லி, ஜன. 21

இந்திய-சீன யுத்தத்தில்இதுவரை 20 அதிகாரிகள் உட்பட 332 இந்தியர் மாண்டனர். 21 அதிகாரிகள் உட்பட 676 பேர் காயமடைந்தனர். 2140 பேர் களைப்பற்றிய தகவல் தெரியவில்லை. இப்புள்ளி விபரங்களை பாதுகாப்பு மந்திரி திரு.சாவன் அறிவித்தார்.

---

## கென்னடிக்கு குருஷ்சேவ் யோசனை

மாஸ்கோ, ஜன 21

அணுசோதனை நடைபெறுகிறதா என்பதை அறிய வருடம் ஒன்றுக்கு 2 அல்லது 3 தடவை நேரில் சென்று கண்காணிக்க ரஷ்யப் பிரதமமந்திரி திரு. குருஷ்சேவ், ஜனதிபதி கென்னடிக்கு அறிவித்திருக்கிறார். இதுசம்பந்தமான தானே இயங்கும் பதிவுநிலையங்கள் அமைக்கவும் திரு. குருஷ்சேவ் சம்மதம் தெரிவித்திருக்கிறார். ஜனதிபதி கென்னடி இதை வரவேற்றிருக்கிறார். ஆனல் வருடம் 8 அல்லது 10 முறை நேரில் கண்காணிக்கவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

---

## கோல்வேஸியில் ஐ. நா. படைகள்

எலிஸபெத்வில்லி, ஜன 21

இந்தியத்தளபதி நொரோன்ஹா தலைமையில் சென்ற ஐ. நா. படை, இன்று கடாங்காவிலுள்ள கோல்வேஸிநகரில் வெற்றிகரமாகப் பிரவேசித்து நேராக அது ஷோம்பேயின் இல்லத்தை நோக்கி முன்னேறிச்சென்றது.

---

## தமிழக காங்கிரஸ் அலுவலகம்

சென்னை, ஜன. 21

காலஞ்சென்ற பழம்பெரும் தலைவர் சத்தியமூர்த்தியின் பெயரைக்கொண்ட, தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தை, முதல்மந்திரி காமராஜர் திறந்துவைத்தார். இக்கட்டிடத்திற்கு ஐந்தரை லட்சம் ரூபாய் செலவாகியது.

## 'சுதேசி உடைகளை அணியுங்கள்'

—எம். பி.

அம்பலாங்கொடை, திங்கள்

"சுதேசி உடைகளை வாங்குவதற்கு மக்கள் முன்வரவேண்டும். வெளிநாட்டு உடைகளிலும் பார்க்க இவை சிறிது தரங் குறைந்ததாக விருந்தாலும் மக்கள் மனம் தளரக்கூடாது. கைத்தொழில் அபிவிருத்திக்கு மக்களின் தியாகம் அதசியம்" என்று இங்கு நடைபெற்ற கடைத் திறப்பு விழாவொன்றில் அம்பலாங்கொடை எம். பி. திரு. பி. டி' எஸ. குலரத்தின பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சுதேசி உடைகளை அணிவதில் இந்திய மக்களை நாங்கள் பின்பற்றவேண்டுமென்றும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உடைகளை அணிவதாலும், நாட்டின் நலனுக்காக அவர்கள் தியாகம் செய்வதாலும் கைத்தொழில்கள் இந்தியாவில் அபிவிருத்தியடைகின்றன. என்றும் கூறினர்.

---

## லோகசபையில்...

(1ம் பககத் தொடர்ச்சி)

### கொழும்புயோசனை பற்றி ராஜாஜி

"இந்திய-சீன எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகள் நிராகரிக்கப்படவேண்டியவையே! ஆனல் இந்த யோசனைகளை இந்தியா ஏ'உறுக் கொண்டால் உடனடியாகவுள்ள ராணுவப் பிரச்னைகளிலிருந்து இந்தியா தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியும்" என்று இந்தியாவின் முதுபெரும் ராஜதந்திரியும் சுதந்திரக்கட்சியின் தலைவருமான சக்கரவர்த்தி ஸி. ராஜகோபாலச்சாரியார் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் சீனவின் ஆதிக்கமும் அரசியலும் வலுவடையுமென்றும் இந்தியா மேற்கிந்திய நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ராஜாஜி கூறினர். நேச நாடுகளுடன் சிக்கலற்ற பூரண ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதனல் இந்தியாவின் கௌரவத்துக்கும் அந்தஸ்துக்கும்இழுக்கு ஏற்பட்டு விடாதென்றும் சமீபத்திய காலச் சம்பவங்களினல் இவ்வித ஒப்பந்தம்செய்து கொள்வது தான் இந்தியாவுக்குள்ள ஒரே வழி யென்றும் ராஜாஜி கூறினர்.

---

## மானிப்பாய் கி. ச. இடைத்தேர்தல்

யழ்ப்பாணம், செவ்வாய்

மானிப்பாய் கிராமசபையின் இரண்டாம் வட்டாரத்திற்கான நியமனப்பத்திரங்கள் நாளை புதன்கிழமை தாக்கல் செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஆசிரியர் கடிதங்கள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குகள் நேரிடலாம். இங்குள்ள தண்ணீர் செல்லும் வாய்க்கால் ஆழம் இல்லாத படியால் தண்ணீர் வீதியை மேவிச் சென்று வீதிக்கருகாமையிலுள்ள வளவுக்குள் செல்கிறது.

க. முருகதாசன்

தெல்லிப்பழை.

---

## இந்தியர்கள் திரும்புவர்

புதுடில்லி, ஜன 21

ஷாங்காயிலுள்ள இந்திய வர்த்தகர்கள், தங்கள் 'வர்த்தகத்தை மூடிவிட்டு இந்தியா திரும்பத் தீர்மானித்திருப்பதாயும், சீனவில் அவர்களிடையே பத்திரமின்மை உணர்ச்சி ஏற்பட்டிருப்பதாயும் பிரதமர்நேரு அறிவித்தார்.

## புத்தர் 'மார்க்' மாற்றப்படும்

### தடைசெய்யப்பட்ட மஞ்சள் விநியோகம்

ஈரோடு, ஜன. 21

புத்தர் உருவத்தை வர்த்தக அடையாளமாக உபயோகித்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஈரோடு மஞ்சள், இலங்கையில் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட ஸ்தாபனம் புத்தர் 'மார்க்கை' அகற்றி இனிமேல் வர்த்தக ஸ்தாபனத்தின் பெயர் மட்டும் பொறித்த பைகளில் மஞ்சளை இலங்கைக்கு அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

புத்தர் உருவத்தை வர்த்தகக் குறியாக உபயோகிப்பது பௌத்தர்கள் மத உணர்ச்சியைப் பாதிக்குமென்ருல், இலங்கைக்கு அனுப்பப்பட்ட மஞ்சள் மூடைகளை வாபஸ் பெற்றுக்கொள்ள முன்னர் தாங்கள் முடிவுசெய்திருந்தனரென்றும் ஆனல், இலங்கையில் தடைசெய்யப்பட்ட மஞ்சள் வேறு பைகளில் போடப்பட்டு விநியோகிக்கப்பட்டுவிட்டதாகவும் சம்பந்தப்பட்ட ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

---

## இலங்கையில் இலக்கிய வளர்ச்சி

### மொஸ்கோவில் சொற்பொழிவு

கொழும்பு, திங்கள்

மார்ட்டின் விககிரமாசிங்கா தொடககம் குணசேன அமரசேகராவரையில் முதுமை பெற்ற எழுத்தாளர் முதலாக இளம் எழுத்தாளர்வரை இலங்கையில பலர் ரஷ்ய நாட்டு இலககிய ஆசிரியர்களையே தங்கள் ஆசிரிய குருவாகக கொண்டிருககிருர்கள் என்பதாக சோவியத் நாட்டின் தேசிய மாணவர் விஞ்ஞான கழகத்தைச் சேர்ந்த விளாடிமிர் விகுகோலவ் என்பவர் மஸ்கோவில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின்போது குறிப்பிட்டார்.

சமீபநாளில் இலங்கைக்கு வந்து இந்நாட்டு இலக்கிய வளர்ச்சி பற்றி தெரிந்துகொண்டு மாஸ்கோ திரும்பிய இவர் அங்குள்ள இலக்கிய நண்பர்கள் கழகத்தில் 'இலங்கையில் இலக்கிய வளர்ச்சி' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ரஷயாவின் புகழ்பெற்ற இலககிய ஆசிரியர்களான லியோ டால்ஸ்டாய், ஐவன் டர்ஜனீவ் ஆகியோரின்பெயர்களை குறிப்பிட்டு இலங்கை எழுத்தாளர்கள் பரம்பரையில் புகழ்பெற்ற பழைய ஆட்கள் முதலாக அரும்பிவரும் இளைஞர் வரை, அனேகர் ரஷ்ய நாட்டு இலககிய ஆசிரியர்களையே தங்கள் ஆதர்ச குருவாககொண்டிருககிருர்களென்றும் கூறினர்.

இலங்கையின் கலைச்செல்வத்தை சோவியத் மககள் கற்றுக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு முன் எப்போதும் இருந்ததைவிட திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சியிலும் அவருக்குப்பின் ஸ்ரீமதி பண்டாரநாயகாவின் ஆட்சியிலும் தங்களுக்குக் கிடைத்திருப்தாகவும் அவர் கூறினர். சிங்கள மொழி இலககியங்கள் நேரடியாக ரஷ்ய மொழியில் மொழிபெயர்ககப்பட்டிருப்பதாயும் அவர் கூறினர்.

இங்குவந்திருந்த நாளில் விளாடிமிக் இலங்கையின் இலக்கிய வளர்ச்சியை கி. மு 3-வது நூற்றுண்டுகாலத்திய சில சாசனங்களிலிருந்து இன்றுவரை ஆராய்ந்தார்.

## வழிபிறக்கும் என்கிருர் மந்திரி

டொன்ரு, திங்கள்

'நாட்டில் இப்பொழுது பல பிரச்னைகள் இருந்தாலும் இவை யாவும் விரைவில் தீர்க்கப்பட்டு மக்கள் கஷ்டமின்றி வாழ வழி பிறக்கும்' என்று கொத்துவிகொட என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மாகாநாமசமரவீர பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தனிப்பட்ட ஒவ்வொருவருடைய கஷ்டங்களையும் எவராலும் தீர்க்கமுடியாதென்றும் அப்படி யாரும் முயன்ருல், அவர் பெரிய கஷ்டத்துக்குள்ளாவார் என்றும் கூறினர்,

எனது விருப்பத்துக்கு மாருக ஒரு கெட்ட காரியத்தைச் செய்து நல்ல பெயர் எடுப்பதிலும் பார்க்க நல்லதொரு காரியத்தைச் செய்து எனக்குச் கெட்டபெயர் கிடைத்தால் அதைப்பற்றி நான் மனம் வருந்தமாட்டேன் என்றும் அவர் கூறினர்.

---

## ஹிந்தி எழுத்தாளர் காலமானர்

பாட்ன, ஜன. 21

பிரபல ஹிந்தி எழுத்தாளர் ஆச்சார்யா சஹாய், தமது 70 வதுவயதில் காலமானர். இவர் "பத்மபூஷன்" விருதுபெற்றவர். முன்னள் ஜனதிபதி டாக்டர் ராஜன்பாபு உட்பட பலர் அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தனர்.


## வலி-கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நீர்வேலி

### மனேஜர் வேலை விளம்பரம்

ஷெ சமாஜ அச்சுவேலிக் கிளை ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு மனேஜர் இடத்துக்குப் பின்னுற் காட்டப்படும் தகைமையுடையோர் சமாஜக் காரியதரிசிக்கு, இரண்டு நற்சாட்சிப் பத்திரப்பிரதிகளுடன் விண்ணப்பங்களைப் பதிவுத் தபால்மூலம் 30-1-63 க்குமுன் அனுப்பும்படி கோரப்படுகின்றனர்.

தகைமை விபரம்

1. இலங்கைப் பிரஜை.
2. வயது 30 க்கு மேலிருத்தல்.
3. பலவகை மொத்த, சில்லறை வியாபார அனுபவம், ஆற்றல், தேர்ச்சியுடையராய்யிருத்தல்.
4. பிணை:- காசாக ரூபா 2000/-. ஆதனப்பிணை ரூபா 5000/-. இது 15-2-63 க்கு முன் வேண்டப்படும். திகதியில் கட்ட வேண்டியதாகும்
5. சம்பளம் $\frac{100-150}{5 \times 10}$ எல்லாம் சேர்த்து வியாபாரத்திறகேற்க விசேட உபகாரப் பணம் வழங்கப்படும். வியாபாரம் வளர்வதற்கேற்ப ஊதியம் கூட்டப்பட இட்முண்டு.

காரியதரிசி

## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)

ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) ஜுபிட்டர் (குருணகலை) லக்ஷ்மி (இரத்தினபுரி)

தீவொளி (நுவரேலியா) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ருகலை)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்



எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எம். எஸ். சரோஜா, மோகன
மற்றும் பலர் நடித்த

# ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

டைரக்ஷன் டி. யோகானந்த்

## மனோகரா

(யாழ்ப்பாணம்)

சிவாஜி, ஜெமினி கணேசன், சாவித்திரி
மற்றும் பலர் நடித்த

### பதிபக்தி


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.